1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
'CATHOLIC PRESS'
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

76-ம் புத்தகம் 43-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 1-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## ஜசிந்தாவின் மணிமொழிகள்

(முன்தொடர்ச்சி)

"சத்திரசிகிச்சை செய்தும் பயன் ஏற்படாது; என்னை அழைத்துப்போகச் சீக்கிரம் வருவதாகத் தேவதாயார் சொல்லியிருக்கிறார்" என ஜசிந்தா சொல்வாள். தேவதாயின் சுத்திகரத் திருநாளன்று அவள் பாவசங்கீர்த்தனஞ்செய்து திவ்வியநற்கருணை உட்கொண்டபின் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள். கண்ணீர் அழுகையுடன் மறைந்தயேசுவிடம் விடைபெற்றாள். நோயாளியை மடத்துப்பிள்ளைகளுடன் வைத்திருந்ததற்காக டக்றர்மாரும், நேர்ஸ்மாரும் கோதினேகன்னியாஸ்திரியைக் கண்டித்துப்பேசினர்.

ஆஸ்பத்திரிக்குக் கோதினே கன்னியாஸ்திரியும், இன்னொரு உபகாரியும் நாள்தோறும் போய்ச் சிறுமியைப் பார்த்து வந்தனர். அவள்பெற்றோரும் ஒருமுறைபோய்ப் பார்த்தார்கள். "தேவதாயார் என்னைப் பார்க்க வந்தார். அவர் என்னைக் கூட்டிச்செல்ல வரும்நாளையும், மணிநேரத்தையும் தெரிவித்து, என்னை நல்லபிள்ளையாய் இருக்கச்சொன்னார்" என ஜசிந்தா ஒருவரிடம் சொல்லி லூசியாவுக்குச் செய்தி எழுதி அனுப்பினாள்.

மாசிமாதம் பத்தாம் நாள் பெரியடக்றர் சத்திரசிகிச்சை செய்தார். நோயாளி மிகப்பலவீனமாய் இருந்தமையால் அவளுக்கு மயக்கமருந்து கொடுக்கவில்லை. உடைகளைக் கழற்றுகையில் அவள்வெகுவாய் அழுதாள். இடதுபக்கத்தில் இரு விலாஎலும்புகளை வெட்டி எடுத்தார்கள். ஒருகையளவு பெரிய காயம் உண்டாயிற்று. காயத்தைக் கட்டும்போது சொல்லமுடியாதவேதனை. ஆனால், பொறுமையாய்ச் சகித்தாள். தாங்கமுடியாவிட்டால் "ஓ, என் நல்ல தாயே; ஓ, என்நல்ல தாயே" என்பாள். "பொறுமையாய் இருக்கவேண்டும், மோட்சம் சேரும்படி நாம் எல்லோரும் வேதனைப்படவேண்டும்" எனக் கூறித் தன்னையே உற்சாகப்படுத்திக் கொள்வாள். "ஓ, யேசுவே, நான் உம்மை நேசிப்பதினாலும், பாவிகள் மனந்திரும்பும்படியும் எல்லாவற்றையும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நீர் அநேகபாவிகளை மனந்திருப்பலாம். ஏனெனில், இது வெகு கடினம்" என்பாள்.

சாக நான்குநாட்களின்முன் அதாவது மாசி 16-ம்நாள் திங்கட்கிழமை தான்படும் பயங்கர வேதனையைப்பற்றி ஞானத்தாயிடம் கூறினாள். பொறுமையாய் இருக்கும்படி ஞானத்தாய் சொல்கையில், "ஞானஅம்மா, கேளுங்கள். இனிநான் முறையிடமாட்டேன். தேவதாயார் திரும்பவும் என்னைப்பார்க்கவந்தார். சீக்கிரம் என்னைக் கூப்பிட வருவார். என்வேதனையை அகற்றிவிட்டார்" என ஜசிந்தா கூறினாள். அதிலிருந்து அவள் முறையிட்டதில்லை. வேதனையின் குறியும் முகத்தில் காணப்படவில்லை.

"இம்முறை தேவதாயார் மிக்கதுயரத்துடன் இருந்தார். தமதுதுயரத்தின் காரணத்தையும் தெரிவித்தார். "பெருந்தொகையான ஆத்துமங்களை நரகத்துக்கு இட்டுச்செல்வது சரீரத்தினால் செய்யப்படும் பாவங்களே. சுகபோகங்களை மனிதர் விட்டொழிக்கவேண்டும். இதுவரை பாவச்சகதியில் இருந்ததுபோல் இன்னும் பிடிவாதமாய்இருக்கக்கூடாது. யாவரும் அதிகதபசு செய்யவேண்டும்" எனத் தேவதாயார் தெரிவித்தார். "தேவதாயாரைப் பார்க்க விசனமாயிருக்கிறது" என்றும் ஜசிந்தாகூறினாள்.

மாசி 20-ம்நாள் வெள்ளிக்கிழமைமாலை ஆறுமணி. "நான் சாகப்போகிறேன், கடைசித் தேவதிரவிய அனுமானங்களை நிறைவேற்றுங்கள்" என ஜசிந்தா கேட்டாள். குருவானவர் எட்டுமணிக்குவந்து பாவசங்கீர்த்தனங் கேட்டபின் மறுநாட்காலை திவ்வியநன்மை கொண்டுவருவதாகச் சொன்னார். "நான் சாகப்போகிறேன், தாமதிக்கக்கூடாது" என அவள் கூறினாள். காலைவரை காத்திருக்கலாம்என அவர்சொல்லிப் போய்விட்டார். இரவுபத்தரை மணி. ஒருநேர்ஸ்மாத்திரம் அருகிலிருக்க, அமைதியாக ஜசிந்தா உயிர்விட்டாள்.

(தொடரும்)

## உன் குருவானவர்

தோமாஸ் போத்தகாழி, பெங்களூர் ஆண்டகை.

(முன்தொடர்ச்சி)

ஆகையால் ஒவ்வொருகிறீஸ்தவனும்தன்குருவையும், கோவிலையும் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கின்றான். இக்கடமையிற்தவறின் தன்மனச்சாட்சிக்கு விரோதஞ்செய்கிறான். அதனால் பாவமாகும். தேர்அலங்கரிப்பிலும், சுரூபங்கள்வாங்குவதிலும், தீபசோடிப்பிலும், வாணவேடிக்கையிலும் பெருஞ்செலவுசெய்து திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர் நம்மிற்சிலர். ஆனால், குருமாருக்கும், கோவிலுக்கும், தவறாமல் உதவிசெய்வதென்றாலோ குருட்டுக்காரணங்களையும் சாக்குப்போக்குகளையும் சொல்லித் தங்கள்கடமையை மறந்துவிடுகின்றனர்.

குருமாரைக்காப்பாற்றுவதும் கோவில், பள்ளிக்கூடங்களைக் கட்டுவதும், தேவாராதனைக்கு வேண்டிய மற்றவைகளைச் செய்வதும் மேற்றிராணியாரின் கடமையேஎன்று எண்ணுகிறார்கள் இன்னுஞ்சிலர். இவ்வளவுஞ்செய்ய அவசியமான ஆயிரக்கணக்கான ரூபாக்கள் மேற்றிராணியாருக்கு எங்கிருந்து வரும்? மேலும், இதுதான் அவருடைய முக்கியவேலையா? தமதுமேற்றிராசனஆன்மசரீரகாரியங்களைக்கவனிப்பதே அவருடைய பொறுப்பு. வெளிநாடுகளிலிருந்து பணப்பிச்சை கேட்பதல்ல அவர்வேலை. ஸ்திரமாக நிறுவப்பட்ட பங்குகளில் கிறீஸ்தவர்களே செய்யவேண்டிய கண்டிப்பானகடமை இது. அப்படியாயின் ஒவ்வொருகிறீஸ்தவனும் கொடுக்கவேண்டிய உதவி எவ்வளவுஎன்று நீ கேட்கலாம். அதற்குவிடை உன் வருவாயிலும் உதாரகுணத்திலும் உண்டு. குறிப்பிட்ட சட்டம் ஒன்றுங்கிடையாது. பொதுவாக, மாதம்அல்லது வாரவீதம் கொடுப்பது உங்கள்இஷ்டத்தைப்பொறுத்தது. ஆனால்அதிக முக்கியமானது இது: ஞாயிற்றுக்கிழமைதோறும் ஒவ்வொரு கிறீஸ்தவனும், சிறுவருங்கூட ஒருசிறு காசையாவது உண்டியிலிட மறக்கக்கூடாது. இது பழக்கமாக வளரவேண்டும். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் கோவிலையும், குருமாரையும் காப்பாற்ற முக்கியஉதவி ஞாயிறு உண்டிதான். ஆனால் நம்நாட்டிலோ கோவிலுக்குப் போகும் கிறீஸ்தவர்களுள் நூற்றுக்கு 60-இல்இருந்து 90 பேர் மட்டும் உண்டியைக் கண்டதும் கண்ணை மூடிக்கொள்ளுகின்றனர். தலையைத் தாழ்த்திக் கொள்ளுகின்றனர். தங்கள் கடமையைச்செய்யத் தவறுகின்றனர்.

அன்புமிக்கமக்களே! இது சரியல்ல. பெருந்தவறு. வேத உதவிக்காக வாரம் ஒருகால் அணா கொடுப்பதால் நீ ஏழையாகமாட்டாய். தின்பண்டங்களைக்கொடுத்தும், சினிமாக்களுக்கு அனுப்பியும், இன்னும் பயனற்ற பலவிஷயங்களில் பணத்தைப்பாழாக்கியும்பிள்ளைகளைக் கெடுப்பதைவிடக் கோவிலுக்கும், குருமாருக்கும், இன்னும் பிறவேதகாரியங்களுக்கும் தாராளமாய் உதவிசெய்யும் நற்பழக்கத்தை அவர்களுக்குக் கற்றுக்கொடு. இவ்வாறு ஒவ்வொருபங்குக் கிறீஸ்தவனும் தன்னாலானஉதவியைத் தவறாமல்கொடுத்தால் இன்னும்பல புதுப்பங்குகளை ஸ்தாபிக்கலாம். அரியபல சங்கங்களையும்அமைக்கலாம்.

எனவே, பங்குக்கிறீஸ்தவரின் ஆர்வமுள்ளஆதரவு குருவானவருக்கு மிகமிகஅவசியம். கொடு; தாராளமாய்க் கடவுளுக்குக்கொடு; கொடுத்தால் இன்னும்தாராளமாய், ஏராளமாய் அவர்கொடுப்பார் என்பதை மறக்காதே! அர்ச். திமோத்திக்கு அர்ச். சின்னப்பர் வரைவதைக் கூர்ந்துவாசி: இவ்வுலக ஐசுவரியவான்களுக்குவிடும் எச்சரிக்கைஇது: கர்வம் வேண்டாம். நிலையற்றசெல்வத்தில் நம்பிக்கைவேண்டாம். அதற்கு மாறாக, தேவைகளையெல்லாம் தாராளமாய்த் தந்தருளும் கடவுளையே நம்பவேண்டும். நன்மை செய்யட்டும். தர்மஞ்செய்ய எப்போதும் தயாராக இருக்கட்டும். அதனால் மறுஉலகில் தங்கள் சத்தியசீவியத்திற்கு அஸ்திவாரம் அமைத்துக்கொள்ளட்டும். (1 திமோத். 6: 17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## ஆறுவது ஆண்டு நிறைவு

— வாஷிங்ரன்

மனிதசமூக முன்னேற்றம்குறித்து ஜனதிபதி ட்றூமன் அவர்கள் இவ்வாரம் பேசியபோது: தர்மமும் நீதியும் உலகிடையே நிலவுவதற்காக ஆதிகாலந்தொட்டுப் பல இன்னல்களையும், எதிர்த்துப்போராடிய பெரியார்களின் திடசித்தத்தையும், தீர்க்கதரிசனத்தையும் குறிப்பிடலாயினர். அவருடைய சொற்பொழிவானது ஐ. நாடுகளின் வாரத்திற்குச் சில தினங்களின்முன் நிகழ்த்தப்பட்டதாகும். அது ஐ. நா. ஸ்தாபன ஆருவதுஆண்டு நிறைவு விழாவை ஐப்பசிமாதம் 24-ந் திகதி கொண்டாடவிருப்பதை ஞாபகப்படுத்தியது. மனித முன்னேற்றத்திற்கும், முயற்சிக்கும் புதுப்புது வழிகளைத் திறந்துவிட்ட பெரியார்களின் தீர்க்கதரிசனத்தின் பயனுகவே ஐ. நா. ஸ்தாபனமும் பிறந்துள்ளது. உலகநாடுகளிடையே ஒத்துழைப்பையும், கூட்டு முயற்சியையும் ஏற்படுத்த ஐ. நா. ஸ்தாபனம் ஒரு சிறந்த சாதனம என்பதைக் கடந்த ஆறுஆண்டுகளிலும் அதற்கு ஏற்பட்ட சோதனைகளும், அவற்றிலிருந்து அது தேறியவிதமும் நன்கு எடுத்துக்காட்டுகின்றன. கம்யூனிஸ்த தடங்கல்களினுல் தளர்ச்சியுருது, புதுப்புதுச்சவால்களையும் ஏற்றுச் சமாளிக்கக்கூடிய ஆற்றலுடன் ஐ. நா. ஸ்தாபனம் இன்று விளங்குகிறது.

## ஐ. நா. மகத்தானபொறுப்பு

— ரோக்கியோ

"உலகநாடுகளிடையேயும், மக்களிடையேயும் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஐ. நா. ஸ்தாபன சக்தியும், அதிகாரமும் மேன்மேலும் வளரவேண்டும்; அது கட்டாயம் வளர்ந்தே தீரும்" என்று ஜெனறல் மத்தியூ பி. றிட்ஜ்வேஅவர்கள் ஐ. நா. ஸ்தாபன தினம்பற்றிவிடுத்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறுர். அவர் மேலும் கூறியதாவது: 1-வது உலகயுத்தம் முடிவடைந்ததும், 2-வது உலகமகாயுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்காகச் சர்வதேசசங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. ஆயின், முடிவிலே சர்வதேசசங்கம் சீர்குலைந்து இல்லாதொழிந்ததையும், 2-வது உலகயுத்தம் நிகழ்ந்ததையும் நமதுதலைமுறையிலேயே நாம் கண்டுள்ளோம்.

"2-வது உலக யுத்தத்தினுல் விளைந்த பெருஞ்சேதத்தினின்றும் புத்துயிர்பெற்ற மக்களின் நம்பிக்கையிலிருந்து ஐ. நா. ஸ்தாபனம் உருப்பெற்றெழுந்தது. தீராத பிரச்சினைகளையெல்லாம் அது தீர்த்துவைக்க வேண்டிய சங்கடம்ஏற்பட்டது. முட்டுக்கட்டைகள், தடங்கல்களை அது தாண்டிச் செல்ல வேண்டியேற்பட்டது. இருந்தாலும் சீர்குலையாமலும், சிதைவுருமலும் இன்றும் நிலைபெற்றிருப்பதே அதுஈட்டிய பெரும் வெற்றியாகும். அதற்கேற்பட்ட சோதனைகளோ அனந்தம்.

"ஐ. நா. ஸ்தாபன இலட்சியங்களைச் சிதறடிக்க முற்பட்டோரும் பலருளர். அதேபோன்று இலகுவில் மனந்தளர்ந்து நம்பிக்கையிழந்தோரும் சிலருளர். இருந்தபோதிலும் ஐ. நாடுகளின் மாபெரும்இராணுவம் ஒரு தனிப் பெருங்கொடியின்கீழ் சமாதானத்தை நிலைநாட்டவும், நாடுகளிடையே கண்ணியத்தை ஏற்படுத்தவும் போராடுகின்றது.

"ஐக்கிய நாடுகளின் செல்வாக்கு, அதிகாரம், சக்தி ஆதியன வளரவேண்டும். வளர்ந்தேதீரும். இனிவரும் சந்ததியார் நமது சேவையைப் பாராட்டுவார்கள். இறைவனின்சாந்தத்தை உலகிலே நிலைபெறச்செய்ய நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், ஏற்றசுமைகளையும், பொறுப்பையும் போற்றுவார்கள்."

## பாதுகாப்பது முக்கியம்

— ஐ. நா. ஸ்தா. நியூயோக்

"உலகசமாதானத்தை நிலைநாட்டுவதிலே வெற்றிகாண ஐ. நா. ஸ்தாபனத்தைப் பேணிப் பாதுகாப்பது இன்றியமையாதது" என்று ஐ. நா. ஸ்தாபன பொதுக்காரியதரிசி டிரிக்விலீ அவர்கள் அதன் 6-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுமுன் விடுத்த அறிக்கையிலே தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதுவருமாறு: "சமாதானத்தை நிலைநாட்டுவதென்பது இலகுவல்ல. நீண்டகாலம் உழைக்கவேண்டும். இன்னமும் நெடுந்தூரம் போகவேண்டும். அமைதியைவிரும்பும் மக்கள்சமுதாயத்திற்கு ஐ. நா. ஸ்தாபனமே அநுபவசாத்தியமான உறுதுணையென்னும் நம்பிக்கையுடன் அதைப்போற்றிப் பேணுவார்களாகில், நமதுமுயற்சி கைகூடும்."

## சோவியற்அரசின் அச்சம்

— வியன்ன

"சோவியற் யதேச்சாதிகார ஆட்சியின்கீழ்வாழும் தொழிலாளரின் கீழ்த்தர வாழ்க்கைநிலைமை அம்பலமாகிவிடுமோவென ருஷியா அஞ்சுகிறது" என்று ஆஸ்திரியாவிலுள்ள அமெரிக்க ஹைகம்மிஷனர் வால்ற்றர் டொன்னெலி தெரிவித்திருக்கின்றுர். சோவியற் ருஷியாவிலே எங்கெங்கு கட்டாயத்தொழில்முகாம்கள் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்தும் சுமார் 5,00,000 படங்கள் வர்த்தகஸ்தாபனம் ஒன்றினிடமிருந்து கைப்பற்றப்பட்டன. இப்படிக் கைப்பற்றுவது சரியல்லவெனத் திரு. டொன்னெலி சோவியற்அரசைக் கண்டித்து ஆட்சேபித்தார். அவருடைய ஆட்சேபனைக்குச் சோவியற் அரசு செவிசாய்க்கவில்லை.

## பட்டினிபோட்டுக் கொலை

— ஹொங்கோங்

"தென்சீனுவிலுள்ள குவாங்சி மாகாணத்திலே சென்ற வசந்தகாலத்தின்போது ஏற்பட்ட உணவுப்பஞ்சத்தினுல் பலர் உயிரிழந்தனர். கம்யூனிஸ்த தலைவர்கள் விரும்பியிருந்தால் இந்த நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்கலாம். மக்கள் பட்டினியால் வாடிவதங்கி மரித்தபொழுது அவர்கள் பண்டகசாலைகளில் தானியங்களைச் சிக்கனமாகப் பூட்டிவைத்திருந்தார்கள். தங்கள்ஆட்சியை எதிர்த்த இந்தமக்களைத் தண்டிப்பதற்கு இந்தக் குரூர உபாயத்தை அவர்கள் கையாண்டார்கள். செஞ்சீனுவினின்றும் தப்பிப்பிழைத்து வெளியேறியஅகதிகள் மேற்கண்டவாறு நிலைமையை விளக்கியுரைத்தார்கள். "உணவுப்பஞ்சத்தினுல் இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவது சாத்தியமில்லை. எங்குபார்த்தாலும்— கம்யூனிஸ்த வட்டாரங்களைத் தவிர்த்து — பஞ்சம் தாண்டவமாடிற்று" என்று நேரிலே பார்த்தவர்கள் கூறியிருக்கிறுர்கள்.

## பிரார்த்தனைச் சுதந்திரம்

— டாபே, கோறியா

ஆயிரக்கணக்கான சீன, வடகோறிய யுத்தகைதிகளுக்குத் தங்கள் இஷ்டம்போல்பிரார்த்தனைசெய்ய இப்பொழுது சுதந்திரம் கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்த ஏகாதிபத்தியத்தின்கீழ் இதுவரை பிரார்த்தனைச்சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. கம்யூனிஸ்த யுத்தகைதிகள் தாங்களாகவே வலியப் 'பிரார்த்தனைக்கூட்டங்களில் பங்குபற்றுவதாகவும், கிறிஸ்துவ ஆலயங்களைக் கட்டும்முயற்சிகளில் சேர்ந்துழைப்பதாகவும் ஐ. நாடுகளின் குருமார் கூறுகின்றனர். "கம்யூனிஸ்த[illegible]தின்கீழ் வாழ்ந்தின் பயனுகத்தான் ஒருமனிதன் தனக்கென விருப்புவெறுப்புகளும், உரிமை சுதந்திரங்களும் உண்டென்பதை இவர்கள் மறந்துவிட்டதாக" அக்குருமார் கூறியிருக்கின்றனர்.

# உங்களுக்குத் தெரியுமா?

**1. கிறிஸ்துநாதர் தமது மலைப் பிரசங்கத்திலே திருவாய்மலர்ந்தருளிய பாக்கியவான்கள் எத்தனை பேர்? ஏன் அவர்கள் பாக்கியவான்கள்?**

எட்டுப்பேர். (1) மனத்தரித்திரர் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்சஇராச்சியம் அவர்களுடையது. (2) சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்வார்கள். (3) அழுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் ஆறுதலடைவார்கள். (4) நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் திருப்தியடைவார்கள். (5) இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கமடைவார்கள். (6) தூய இருதயமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் சர்வேசுரனைத் தரிசிப்பார்கள். (7) சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் தேவமக்கள் எனப்படுவார்கள். (8) நீதியின்நிமித்தம் உபத்திரவப் படுகிறவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், மோட்ச இராச்சியம் அவர்களுடையது.

**2. வேதாகமத்திலே ஏரோது என்ற நாமத்துடன் காணப்படும் அரசர்களைப்பற்றிய விபரம்யாது?**

(1) பெரிய ஏரோதாரசன். தேவபாலன் பிறந்தகாலத்திலே பெத்லகேமிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் மாசற்றகுழந்தைகளைச் சங்கரிப்பித்தவன் இவனே. இவன் ஓர்காலம் கலிலேயாவின் தேசாதிபதியாயிருந்து, கி. மு. 40-ம் ஆண்டு உரோமர்களின் தயவால் யூதேயாவின் அரசனுயினன். என்றுலும் இவன் சாதியில் ஓர் இதுமேயனே. (2) பெரியஏரோதன் மகனுன ஆக்கிலோஸ் ஏரோதன் தனது தகப்பனின் இராச்சியத்தில் அரைவாசிக்கு அதிபதியாக வந்தான். (3) பெரியஏரோதனின் மற்றுேர்மகன் அன்ரிப்பாஸ் ஏரோதன். கலிலேயாவின் அதிபதியாயிருந்த இவனே அர்ச். ஸ்நாபக அருளப்பரைக் கொலைப்படுத்தினவன். யேசுநாதர் தமது திருப்பாடுகளின்போது இந்த அன்ரிப்பாஸ் ஏரோதன்முன்பாகவே கொண்டுபோய் விடப்பட்டார். (4) முதலாவது பெரிய அகிளிப்பா ஏரோதன் பெரியஏரோதனின் பௌத்திரன். அர்ச். இராயப்பரைச் சிறையில் இட்டவனும், அர்ச். யாகப்பரைச் சிரச்சேதம் செய்வித்தவனும் இவனே.

**3. மிகப் பலமுள்ள பிராணி எது?**

யானைகள் அதிகபாரத்தைத் தூக்க முடியுமாயினும், சில பூச்சிகளின் பருமையையும், அப்பருமைக்கேற்ப அவைகள்செய்யும் வேலையையும் ஒப்பிட்டுப்பார்த்தால் அவைகள் யானையிலும்பார்க்கப் பலமுடையன. நிலத்திற்திரியும் வண்டு தனதுபாரத்திலும் பார்க்க 180 மடங்கு அதிகபாரத்தை இழுக்கக்கூடும். பெரியவண்டு தன்னிலும்பார்க்க 300 மடங்கு பாரத்தை இழுக்கும். ஒருவகை உழுவான்பூச்சி தன்னிலும்பார்க்க 500 மடங்கு அதிகபாரத்தை அசைத்துத்தள்ளும். ஆபிரிக்கவண்டு சிலசமயங்களில் தனது உணவைத் திரட்டித் தனது முன்னங்கால்களில்நின்று பின்னங்கால்களால் உருட்டிச்செல்கிறது. அது உருட்டிச்செல்லும்பந்து அதனிலும்பார்க்க 40 மடங்கு அதிகபாரமுடையது.

**4. இந்தியன் ஒருவனின் சராசரி ஆண்டுவருவாய் என்ன?**

ஒருஇந்தியனின் சராசரிவருமானம் 82 ரூபா. யப்பானியனுடையது 271 ரூபா. ஜேர்மனியனது 634 ரூபா. பிரான்சியனது 636 ரூபா. இங்கிலீஷ்காரனது 1,092 ரூபா. கனடியனது 1,268 ரூபா. அமெரிக்கனது 2,053 ரூபா.

**5. ஒலி காற்றிலோ, நீரிலோ வேகமாகச் செல்லுகிறது?**

ஒலி காற்றில் செக்கனுக்கு 1,090அடி தூரம் செல்கின்றது. அதே நேரத்தில் நீரின்கீழாக 4,700 அடி தூரம் செல்கின்றது.

**6. பக்ரீறியா (Bacteria) என்னும் அணுக்கிருமிகள் எவ்வகையின?**

பக்ரீறியாஎன்னும் அணுக்கிருமிகள் தாவரஇனத்தைச் சேர்ந்தவை. இவற்றின் குறுக்களவு ஒரு அங்குலத்தின் இருபத்தையாயிரத்தில் ஒருபங்கு ஆகும் இவற்றுள் 6,400 கோடி கிருமிகளின்பாரம் ஒரு தானிய நிறையாகும். இவற்றுள்ஒன்றை அரைச்சதமளவுக்குப் பெருப்பித்து, ஒரு மனிதனையும் அதேவீதத்துக்குப் பெருப்பித்துநோக்கினுல் மனிதன் எவறெஸ்ற் மலையளவுக்கு ஆறுமடங்கு உயரமுடையவனுகத் தோற்றுவான். ஒரு சாதாரண மனிதனின்உயரம் 5 அடி 10 அங்குலம். எவறெஸ்ற் மலையின் உயரம் 29,141 அடியாகும்.

# நாஞசங்கதிகள்

—அணுக்குண்டு விமானப்படையெடுப்புகளை எதிர்ப்பதற்கென்று ருடருடன்கூடிய ஆயுதங்கள் அமைந்த ஓர் புதுவகுப்பு ஜெற் விமானத்தைப் பிரித்தானிய விமான நிர்மாணிகள் கட்டிவருகின்றுர்கள். இது ஒரு விமானியையும், ருடர்மாலுமியையும் ஏற்றிச்செல்லத்தக்கது. இதிலுள்ள ருடர்கருவி இந்தவிமானத்தை அதன் இலக்கைநோக்கி வழிநடத்தக்கூடியதாகும்.

—அடுத்த மூன்றுவருடங்களிலும் ஆஸ்திறேலியா தனது பாதுகாப்புக்கென்று எழுபதுகோடிபவுண்வரையில் செலவிடவிருப்பதாக அதன் பிரதமரான றொபேட் மென்சீஸ் அறிவித்திருக்கின்றுர். சென்ற வருடத்திலே தனது பாதுகாப்புக்கென்று அது செலவிட்டது 13 கோடியே 30 லட்சம் பவுண். இவ்வருடச் செலவுமதிப்பு 18 கோடியே 17 லட்சம் பவுண்.

—சென்ற ஐப்பசிமாதம் 7-ந்திகதி பரிசுத்த செபமாலைநாயகியின் திருநாளன்று ஐரிஷ்சேனை தேவதாயாரின் பாதுகாவலில் ஒப்படைக்கப்படலாயிற்று. அன்றுதினம் அயர்நாடு முழுவதிலுமுள்ள கோட்டைப்படைக் கோவில்களிலெல்லாம் விசேஷ திருவைபவங்கள் நடைபெறலாயின. வருங்காலத்திலே ஐரிஷ்சேனையின் பாதுகாவலர் திருநாளாய்ச் செபமாலைமாதா திருநாள் கொண்டாடப்படும்.

—பாப்புமார் மரிக்கும்போது அவர்களின் உடலங்களைச் சுகந்தமூட்டிப் பதமழியாமற் பக்குவப்படுத்திவந்தவரான டக்றர் லூய்ஜி லான்கெலிஅவர்கள் தமது 74-ம்வயசிலே றோமாபுரியில் காலஞ்சென்றுரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. இவர் கடைசிமுறையாக 1922-ம்ஆண்டு பரமபதமடைந்த 15-ம்ஆசீர்வாதப்ப பாப்பானவரின் உடலைச் சுகந்தமூட்டிவைத்தார்.

—நியூயோக்நகரின் மேயரான திரு. வின்சென்ற் இம்பெலிற்றர் அவர்கள் சமீபத்திலே பரிசுத்தபாப்பரசரின் அந்தரங்கபேட்டி பெறலாயினர். அத்தருணம் பரிசுத்தபிதா அவர்மூலமாக நியூயோக்நகருக்குத் தமது ஆசீர்வாதம் அனுப்பிவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## ஆலய நவீன வாத்தியம்

கீர்த்திவாய்ந்த கோடீசுரரான ரொக்பெல்லர் குடும்பத்தைச்சேர்ந்த ஒரேயொரு கத்தோலிக்கராகிய திரு. ஜேம்ஸ் ரொக்பெல்லர் அவர்கள் புறூக்லின் நகரிலுள்ள சமாதான இராக்கினியின் திருசேத்திரத்திலே அமெரிக்காவின் மகா நேர்த்தியான இசையமைந்த வாத்தியக் கருவிஒன்றை நிறுவிவருகின்றார். இசைக்குழற்கருவிகளை அமைப்பதிலேயே தமது சீவிய காலத்தைச் செலவிட்டுவந்திருக்கின்ற இவர் தற்போது செய்துமுடித்துள்ளது, 'ரொக்பெல்லர் இருதரப்புச் சங்கீத வாத்தியக்கருவி' யென அறியப்படுகிறது. ஆலயத்தின்மத்தியிலுள்ள இந்தவாத்தியத்தின் சங்கீதஓசை அமர்ந்ததும் அதன் எதிரொலிகள், அதாவது பிரதி ஓசைகள். அவ்வாலய பெரிய அடுத்தாரின்மேலாகப் பலிபீடஸ்தானத்திலே அதிகந்தூரத்தில் மறைத்துவைக்கப்பட்டு, அவ்வாத்தியத்துடன் தொடர்புள்ள மற்றிருவாத்தியங்களிலிருந்து பிறப்பதைக் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

## ஞாபகதபால் முத்திரைகள்

கல்சிடன்நகரில்நிகழ்ந்த திருச்சபை மகாசங்கத்தின் பதினைந்தாம் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாகப் புதியஇனமான சிலதபால்முத்திரைகளை வத்திக்கான் சித்தஞ்செய்கின்றது. இந்தவிழா சென்ற ஐப்பசி மாசத்திலே ஆடம்பரவைபவங்களுடன் கொண்டாடப்படலாயிற்று. இந்தஞாபக தபால்முத்திரைகள் மும்மடிக்கிரீடம் புனைந்தபடியே முதலாவது சிங்கராய பாப்பானவரின் பிரதிமையையும், வத்திக்கானிலே சிஸ்ரைன் சிற்றாலயச் சுவர்ச்சித்திரத்திலிருந்து எடுக்கப்பெற்ற அம்மகாசங்ககூட்டப் பிரதிமையையும் கொண்டிருக்கும். இன்னும் பாப்பரசின் இராச்சியத்திலே 1852-ம்ஆண்டு முதன்முதலாகத்தபால்முத்திரைபாவனைக்குவந்த முதல் நூற்றாண்டு ஞாபகார்த்தமாகவும் ஓர் ஞாபக தபால்முத்திரை சித்தஞ்செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

## பாத்திமா சினிமாப்படம்

போர்த்துக்காலிலே அஸ்பாபில்ம்கம்பெனி "பாத்திமா நாயகி" எனும் சினிமாப்படத்தைத்தயாரித்திருக்கிறது. இதிலே நடிகர்களாய் ஸ்பானியர், போர்த்துக்கீசர், மெக்சிக்கர், இத்தாலியர் ஆதியோர் நடித்திருக்கின்றனர். "சதுப்புநிலங்களின்மேல் பரலோகம்" என்ற சினிமாப்படத்திலே அர்ச். மரிய கொறெற்றியாக நடித்த இனெஸ் ஓர்சினி எனும் பெண்பிள்ளை இதிலே பாத்திமாபதியில் தேவதாயாரின் காட்சி பெற்ற பிள்ளைகளில் ஒன்றாக நடித்திருக்கின்றாள். பாத்திமாவிலே பரிசுத்தவருட முடிவுதிருச்சடங்குகள் சென்ற ஐப்பசி மாதம் 13-ந்திகதி நடைபெற்றபோது இந்தச்சினிமாப்படம் அங்கு முதன் முதலாகக் காண்பிக்கப்படலாயிற்று.

## கன்னியரின் இரத்ததானம்

நியூயோக்நகரிலே இரத்ததானம் அளிக்கும்படி கேட்டுவிடுக்கப்பட்ட ஓர் வேண்டுகோளின்பேரிலே அங்குள்ள 502 கத்தோலிக்க கன்னியாஸ்திரீமார் தங்கள் சரீரத்திலிருந்து ஆளுக்கு ஒரு பைந் வீதம் இரத்தம உபகரித்தார்களென தந்திச்சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. நியூயோக்பகுதிச் செஞ்சிலுவைச்சங்கத்தின் இரத்த சேமிப்புத்திட்டப்படி, செனவின்சென்ற் ஆஸ்பத்திரியில் ஒரேநாளிலே இவ்வளவு பெருந்தொகையான இரத்தம் எடுத்துச் சேமிக்கப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

## ஒன்பதாவது மேற்றிராணியார்

கம்யூனிஸ்த சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்ட அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாருள் ஒன்பதாம் ஆளாகப் பொல்லியோ அதிமேற்றிராணியார் கம்யூனிஸ்த சிறைச்சாலைஒன்றிலே ஆறுமாதம் சிறையிருந்தபின் ஹொங்கோங்போய்ச் சேர்ந்திருக்கின்றார். 40 வயசுடையவரான இவர் மூன்றுகுருமார் சமேதராய் அங்கு சென்றனர். மற்றும் 11 அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் கம்யூனிஸ்த சீனாவில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் எழுவர் சிறைவாசஞ்செய்ய, ஏனையநால்வரும் தங்கள் மனையிலேயே அடைத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## புதிய யேசுசபைக்கல்லூரி

இந்தியாவின் புதியகத்தோலிக்க கல்லூரியில் இதுவரை சேர்ந்துள்ள மாணவர்களில் ஏறக்குறைய நூற்றுக்கு ஒருவரே கத்தோலிக்கராவர். டில்லிநகரிலே முன்னர் அரசாங்க மத்திய கல்லூரியென அறியப்பட்டிருந்த இதனை அமெரிக்க யேசுசபைக்குருமார் பொறுப்பேற்றபின் "நிர்மலாகல்லூரி" யென அறியப்படுகிறது. நிர்மலாஎன்பது அமலோற்பவநாயகியென அர்த்தங்கொள்ளும் சமஸ்கிருத மொழியாகும். இது டில்லித் தேசீய சர்வகலாசாலையின் ஓர் பாகமாக இணைந்துள்ளது. தற்போது இதிற்சேர்ந்துள்ள மாணவர்கள் 450 பேர். இவர்களில் பெரும்பான்மையினர் இந்துக்களே.

## மலையாளக் காங்கிரஸ்

திருவிதாங்கூர்–கொச்சி இராச்சியத்திலே சமீபத்தில் நிகழவிருக்கும்பொதுத்தேர்தலில்மலையாள கத்தோலிக்க காங்கிரஸ் 32 கத்தோலிக்க அபேட்சகர்களை நிறுத்தவிருக்கின்றது. இவர்களில்நால்வர் புதியடில்லிப் பாராளுமன்ற தேர்தலுக்கும், ஏனையோர் திருவிதாங்கூர்–கொச்சிச் சட்டசபைத் தேர்தலுக்குமாகப் போட்டியிடுவார்கள். இந்த 32 தொகுதிகளிலும் கத்தோலிக்கர் ஐக்கியப்பட்டு நின்றால் அவர்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுவதற்குக் கஷ்டமே இருக்கமாட்டாது. திருவிதாங்கூர்–கொச்சி இராச்சியத்திலே அரசாங்கத்தின் கிறீஸ்தகல்வி அடக்குமுறைக் கொள்கையையிட்டே மலையாளக்கத்தோலிக்க காங்கிரஸ் முன்னில்லாதவிதமாக இந்தநடவடிக்கையை எடுத்துக்கொண்டது.

# தமிழின் வளர்ச்சி

## பற்றிய சில குறிப்புக்கள்

(அறிஞர் தனிநாயக அடிகள்)

செந்தமிழ் சிவணிய யாழ்ப்பாண நாட்டில், தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் குடைநிழற்கீழ் நிகழ்ந்த தமிழ்த் திருவிழா, ஈழத்திருநாட்டில் மட்டுமே அன்றி, ஏனையதமிழ்நாட்டிலும், தமிழுணர்ச்சியினை ஒருவாறு பெருக்கியது. இக்காரணம்பற்றியே, எங்கள் ஈழநாட்டிற்கு ஏனையதமிழ்நாட்டிலிருந்து விருந்தாய்வந்த தமிழர் பலர், ஈழத்துஆடவரும் பெண்டிரும்காட்டிய தமிழ்ஆர்வத்தைப் பலகிழமைகளாகச் செய்தித் தாள்களில் வியந்து புகழ்ந்து வரைந்துள்ளார். வேற்றுநாடுகளில் ஈராண்டுகளாகத் தமிழ்த்தொடர்பற்றுத் தவித்தயான், மூன்று நாட்களாய்த் தமிழ்த்தேனை மடுத்து மடுத்துப் பருகலானேன். தமிழ்அன்னையின் சாயலினையும், தமிழ்நாட்டின் எண்திசைகளிலுமிருந்து வந்தோரில் கண்டுகளிப்புற்றேன்.

இதுகாறும் நிகழ்ந்த நான்கனுள், இதுவே நான்முதற்கண்ட தமிழ்விழா. ஆதலால், தமிழ்வளர்ச்சியைப் பற்றியும், இற்றைய இலக்கியத்தைப்பற்றியும் சிறிதேனும் சிந்திப்பதற்கு, நான் கண்டவை கேட்டவைகள் முறையே காரணமாயின. தமிழகத்தின் எழுத்தின் வல்லாரும், பேச்சின் வல்லாரும் பலர் வந்திருந்தனர். புதியநூல்களைப் போற்றி, அவற்றிற்குப் பரிசுவழங்கினர். தமிழ்ப்பெருங்கடலின் இக்காலைய நீரோட்டங்களைக் குறித்து உரைகளும் நிகழ்த்தினர்.

இருபது ஆண்டுகட்குமுன்னர் செந்தமிழ் என்பது அருகியபண்டமாய் வழங்கியது. மறைமலைஅடிகள், திரு. வி. கலியாணசுந்தரர் முதலான ஒருசில நூலாசிரியர்தவிர, ஏனையோர்பலர் பிறமொழிக்கலப்பினை விரும்பி, அக்கலப்புநடையே தமிழ்நடையைச் சிறப்பித்துள்ளதெனக் கருதிவந்தனர். இன்று தமிழை நன்குபயின்ற எழுத்தாளர் தமிழ்மகளின் கற்பைக் காப்பாற்றி வருகின்றனர். ஒருசிலர்மட்டுமே, தமிழ் தனித்துஇயங்க வல்லதாகுமோ, பிறமொழிக் கலப்பினால் அது வளம்பெறுமோ எனஐயுற்று, தமிழ்நடையில் வடசொற்களையும், திசைச்சொற்களையும் பெய்துவருகின்றனர். தமிழ் என்னும் பெயர்தானும், அது தனித்துஇயங்க வல்லதுஎனக் குறிப்பதை அறியார்.

இச்செந்தமிழ் இயக்கத்திற்குத் தமிழ்நாடு என்னும் உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட அரசியல் இயக்கங்களும் காரணமாயின. நம் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பண்டைத் தமிழ்இலக்கியங்களைப் பயிலுமாறு நிறுவியதும் காரணமென்று எண்ணுதற்கு இடமுண்டு. இவ்விலக்கியங்களைப் படிப்போர், தமிழில் கூறமுடியாத பொருள் ஒன்றும் இல்லைஎன்றும், எழுதும்பொருளை எவ்வாறு எழுதவேண்டும் என்றும் அறிவர். இவ்விலக்கியங்களைப் பயிலாதார் செந்தமிழைப் பெரும்பாலும் சீரழித்து வருகின்றனர். தமிழ்நடை வளம்பெற வேண்டுமாயின், தமிழ்எழுத்தாளர் தமிழ்இலக்கியங்களில் போதிய அறிவு படைத்தவர் ஆதல்வேண்டும். இற்றை ஆங்கில இலக்கியத்தில் மேல்வரிச்சட்டமாக விளங்கும் எழுத்தாளர் அனைவரும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற புலவரே என்பது குறிக்கற்பாலது. அங்ஙனமே தமிழகத்தின் பல்கலைக்கழகங்களில் முறையே பாடங் கேட்டவர், நாட்டில் செந்தமிழின் செஞ்சுவை விஞ்சுமாறு உணர்த்திவருகின்றனர்.

பண்டை இலக்கியங்களில்தோய்ந்த அறிவுபெறின், அவ்வறிவு புதுமை இலக்கியம் படைத்தற்கு இடையூறாகநிற்கும் என்பதுதவறு. சிலப்பதிகாரம் பயின்றால், புதியஇலக்கியம் இனிமை குறைந்துபோகுமா? கம்பரைக்கற்பின் கற்பனையும், சொல்வளமும் குன்றிவிடுமா? இத்தகைய நூல்கள் எக்காலத்திலும் படிப்போர்க்குப் பயன்அளித்தல்பற்றியே, இவற்றை இலக்கிய நூல்கள் என்று அழைக்கின்றோம். ஆங்கிலஅறிவும், எழுத்தாண்மையும் படைத்தல் வேண்டுமெனின், பல்லாண்டுகட்குமுன் வாழ்ந்துள்ள சாசர் (Chaucer) என்னும் புலவரைப் படிக்க வேண்டும் என்பர். அதுபோலவே, புதுமை இலக்கியம் படைக்க வேண்டுமேல், பண்டைச் சங்கஇலக்கியங்களில் போதியஅறிவினைப் படைத்தல்வேண்டும். எளியநடைக்கும், அழகிய சொல்லணிமதிக்கும், இவற்றையே அடிப்படையாகக் கோடல் உறுதுணை ஆகும்.

இன்று நமதுநாட்டுச் செய்தித்தாள்களும், கிழமைத்தாள்களும் செந்தமிழ் வளர்ச்சிக்கு ஆதரவுஅளிப்பனவாகத் தோன்றில. அவைதாமும் இவ்வியக்கத்தில் பங்குபெறுமெனின், இது முற்றிலும் வெற்றிபெறும் என்பதற்கு ஐயமின்று.

செந்தமிழ் இயக்கத்திற்கு வேறொரு தடையுமுளது. அமெரிக்க நண்பர் ஒருவருடன் தென்னிந்தியாவில் புகைவண்டியில் சென்றுகொண்டிருந்தேன். அவ்வண்டியில், எமக்கு அருகில், தமிழர் சிலர் அமர்ந்திருந்தனர். தமிழில் — ஆங்கிலத் தமிழில் எனக்கூறின், இதனினும் மிகப்பொருத்தமாகும்—ஆங்கிலத் தமிழில் உரையாடலாயினேம். அதனைச் செவியுற்ற என் நண்பர் என்னை நோக்கி, "தமிழ் தனித்து இயங்கும் மொழி என்றும், சொல்வளம்பெருகிய மொழி என்றும், நீங்கள் சொல்வீர்கள். ஆயின், தமிழ் உரையாடலில் இத்தகைய ஆங்கிலச் சொற்களையும், தொடர்களையும் சேர்க்க வேண்டுமெனின், அது எங்ஙனம் தனித்துஇயங்கும் மொழியாகும்?" என்றார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ்விழா நிகழ்ந்தபொழுது, இக்கலப்பு வழக்கைக் கண்டித்துச் சிலகட்டுரைகள் எழுந்தன. இக்கலப்பு வழக்கிற்குக் காரணம் மடிமையே. தமிழிற்சொல்ல முடியாதபொருள் ஒன்றுமில்லையென்றபின், தமிழ்உரையாடலில், ஆசிரியரும் புலவரும் உள்ளிட்டோர் தாமும், "இந்த Poem-ஐ translate செய்ய வேண்டும்." "Cholas History இல் வரும் Many Ministers Kings உடைய Relations ஆகவே இருந்தார்கள்." என்ற பான்மையில் தமிழைக் கையாளும்பொழுது, தமிழ்வளர்ச்சி விரும்பும் சிலர்க்கு வெறுப்புண்டாதலில் வியப்பொன்றும் இல்லை. இத்தாலியத்தை இனிதுணர்ந்த ஆங்கிலேயர், தமக்குள்ளே பேசும்பொழுது, இத்தாலியத்தை ஆங்கிலத்துடன் கலந்தா பேசுகின்றனர்? ஆங்கிலம் நன்கு

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**கார்த்திகைமாதம் 1951**

| | | | |
|---|---|---|---|
| வெ | 2 | உத்தரிக்கிற ஆத்துமாக்கள் திருநாள் | (க) |
| சனி | 3 | அர்ச். மலக்கியாஸ் | (வெ) |
| ஞா | 4 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 25-ம் ஞாயிறு — சாள்ஸ் பொரோமையார் | (ப) |
| திங் | 5 | அர்ச். கலாசியோன் | (சி) |
| செவ் | 6 | அர்ச். லெயோனர் | (வெ) |
| புத | 7 | அர்ச். வில்புரோர்த்தப்பர் | (வெ) |
| வியா | 8 | அர்ச். கொட்பிறே | (வெ) |

சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

கார்த்திகைமாதம் 1-ந்திகதி

## இக்கால தீமைகள் பற்றிப் பரிசுத்த பாப்பரசரின் சாதாரண நிருபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

உத்தமவிதமாகச் செபமாலையை ஓதவேண்டுமானல், ஒவ்வோர் காரணிக்கத்திலும் குறிக்கப்பட்ட பரமஇரகசியங்களைப்பற்றித் தியானித்து, அதை ஓதிவரவேண்டும். அவ்விதம் செய்வதினல் அவைகளில் அடங்கிய ஞானப்பொக்ஷங்கள் யாவையும் அடைந்துகொள்ளுவோம். என்றும் அழியாத நன்மையிலுள்ள எமது நம்பிக்கை மேன்மேலும்வளரும். யேசு இரட்சகரினதும், அவருடைய பரிசுத்த தாயாரினதும் அடிச்சுவடுகளை ஆனந்தத்துடன் பின்பற்ற நமதுஆத்துமத்தில் ஊக்கமுண்டாகும். ஒரேமந்திரங்களைத்திரும்பத் திரும்பச் சொல்வதினல்சலிப்புண்டாகுமென எண்ணவேண்டாம். பயபக்தியுடனும், தியானத்துடனும் அவைகளைச் சொல்வதினல், செபமாலை ஓதுவதில் ஒருவித ஊக்கம் உண்டாகும். அதுவும் செபமாலையினலே தேவதாயாரின் அன்பையும், அவருடைய வல்லபமுள்ள அடைக்கலத்தையும் என்றுமே எம்மேல் வலிந்து இழுத்துக் கொள்ளலாமென்ற நம்பிக்கையினல், எமது இருதயம்பூரித்து, அந்தப்பக்தி முயற்சியில் மேன்மேலும் ஆர்வம்கொள்ளுவோம். ஆகவே, நாம் இந்த அரியபக்தி முயற்சியை ஒவ்வோர் கிறீஸ்துவ இல்லத்திலும் ஸ்தாபிக்க எம்மாலான பிரயாசைஎல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும். செபமாலைப்பக்தியினலே மனிதர் யாவரும், எல்லாச் சாதிசனங்களும், எல்லாத்தேசத்தவர்களும் அடையக்கூடிய இகபர நன்மைகள் யாவையும்பற்றி இடைவிடாது நாம் யாவருக்கும் படிப்பிக்கவேண்டும்.

அதிவிசேஷமாகக் குடும்பசெபமாலை ஓதும்பழக்கமானது நமதுநாட்டில்நன்ருகவேரூன்றிபலிக்கும்படி செய்யவேண்டும். அது எங்கள்மேல் சுமந்த ஒரு திருத்தொண்டு. இல்வாழ்க்கையிலே, சனசமூகத்திலே, அரசியலிலே எத்தனையோவிதமான ஊழல்கள் பெருகிப்பலுகி வருகின்றனவே; தேவகட்டளைக்கு முழுதும்மாருகத் தேவனையே மறந்து மனுக்குலம் அழிவிற்கு நேராகச் செல்லுகின்றதே என்று அநேகர் புலம்புகின்ருர்கள். மெய்தான். ஆனல், இந்தப்பயங்கரமான நோயைப் போக்கும் முறையையும், மருந்தையும் தேவதாயார் எமதுகையிலே வைத்திருக்கிருர். அதனைத் தக்கவிதமாக உபயோகியாததே நாம் செய்துவரும் தப்பிதமாகும். சனசமூகம் சீர்சிறப்பாக, பரிசுத்தமாகஇருக்கவேண்டின் தேசத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் அவ்விதம் இருக்கவேண்டும். குடும்பங்களே சனசமூகத்தின் அத்திவாரம். பரிசுத்தமானகுடும்பங்கள் வேண்டுமா? குடும்பசெபமாலை ஓதுவோமாக!

நாளும் பிற்சரிவாகச் சூரியனும் அஸ்தமனமாக, வீட்டில் விளக்கேற்றி, அதில்வசிக்கும் மாதாவின் பிள்ளைகள் யாபேரும் கையில் செபமாலை ஏந்திச் செபிப்பதைக்காண்பது எமது இதயங்களைக் கொள்ளைகொள்ளும் இனியகாட்சி அல்லவா! “பிரியதத்தத்தினலே பூரணமரியாயே! சருவேஸ்பரனுடைய மாதாவே! தாயே! இராக்கினியே! ........எவ்வளவு இன்பமான கீதம்! என்ன பரலோககானம்! கணவனும் மனைவியும், பெற்ருேரும் பிள்ளைகளும், எம்முடனுள்ள பாட்டனும் பாட்டியும், ஏவலாளர்களும் ஒருங்குகூடி முழந்தாளிட்டு எமது யாபேருடைய இதயங்களும் ஒன்ருக இணைந்து, எமது பரலோகஅன்னையை அன்புசொரிந்து வாழ்த்தும்காட்சியானது சம்மனசுகளையும் தாயாரையும்அன்பைப்பெருக்கி இன்புறச்செய்யும்ஆனந்த காட்சியாகுமன்ருே! இதைக் கண்ணுறும் எமது அன்புள்ள மாதா எம்மத்தியில் இறங்குவாரே. எம்மைக் கருணையுடன் நோக்குவாரே. தமது ஆசிகளை எம்மேல்பொழிவாரே. மனச்சமாதானம், ஆத்துமசமாதானம், குடும்பசமாதானம் ஆதியவற்ருல் எமது வறுமை நிறைந்த குடிசைகளை நிரப்புவாரே.

ஆகவே, அத்தகையகிறீஸ்துவ குடும்பம் நசரேத்தூரில் வாசஞ்செய்த திருக்குடும்பத்தின் சாயலைப் பிரதிபிம்பிக்கும். அதன்வாசம், சாங்கோபாங்கத்தின் இல்லிடமாகும். ஒரு தேவ ஆலயத்தை ஒத்திருக்கும் என்றும் சொல்லலாம். அந்தஇல்லிடத்திலிருந்து செபமாலை என்னும் செபம் பரகதியைநோக்கிச் செல்லச்செல்ல, அவ்வில்லத்தாரினதுசீவியமும் உத்தமகிறீஸ்துவ சீவியமாகத்துலங்கும்.

பதினைந்து காரணிக்கங்களையும், நாம் தியானிக்கும்பொழுது, எமது ஆண்டவரினதும், மாதாவினதும் சீவியசரித்திரத்திலுள்ள பிரதான சம்பவங்களையும், அவைகளில் அடங்கியுள்ள பரமஇரகசியங்களையும்பற்றி நாம் பத்தியுடனும், ஆராய்வுடனும் சிந்திப்போம். அதனல் விசேடமாக வயதில்வளர்ந்தவர்கள் திருக்குடும்பத்தின் முன்மாதிரியைப் பின்பற்ற ஏவப்படுவார்கள். இன்பத்திலே அமரிக்கையையும், துன்பத்திலே ஆறுதலையும், திடனையும் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவார்கள். கள்ளரும் கபடரும் கொள்ளைகொண்டுசெல்லாத திரவியமும், செல்லும் பூச்சியும் அரிக்காத செல்வமுள்ள பரகதியில்தான் என்றும்கண்ணுக இருப்பார்கள்.

சிறுவர் இதயங்களிலும் செபமாலைப்பக்தி தேவநேசத்தை அனலாக மூட்டிவிடும் என்று சொல்லவும் வேண்டுமா? பாத்திமா மாதாவின் காட்சிகளே அதற்குச்சாட்சி. விசுவாசசத்தியங்களைச்சார்ந்த உண்மைகளைப்பற்றிப் படிக்கவும், சிந்திக்கவும் இப்பக்தி அவர்களை அருட்டிவிடும். சிறுவர்களின் தூய இதயங்களில் தேவசிநேகமும், பிறர்சிநேகமும், மாதாவின் மேலும், சூசையப்பர் முதலாம் சிட்டர்கள் மேலும் உருக்கமானபக்தியுமாகிய அழகிய அநேக நறுமணமலர்களையும் புஷ்பிக்கச்செய்யும். சிறுபிராயத்திலேயே செபமானது மனிதர்புரியும் கிரிகைகளுள் எவ்வளவு உந்நதமானதென்பதையும், அது தேவனிடம் எவ்வளவுவல்லமையுள்ளதென்பதையும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஆகவே தற்காலத்தில் மானிடசென்மத்தைப் பாதித்துநிற்கும் பெரும்பழிகள், பாவங்கள் என்னும் கொடிய நோயை அகற்றிவிடக்கூடிய மோட்சசஞ்சீவி செபமாலைப்பத்தியேயென்று நாம் உறுதியாகக் கூறுகின்ருேம்.

(தொடரும்)

## யுத்தகால பிரதமர்

பிரித்தானியிலே சென்ற 25-ந்திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலின் விளைவாய் அங்கே திரு. கிளெமென்ற் அற்லி அவர்களைப் பிரதமராகக்கொண்டு அரசுநடத்திவந்த தொழிற்கட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. கன்சர்வேற்றிவ்என அறியப்படுகின்ற பரம்பரைக்கட்சி வெற்றிஈட்டியமையாலே அக்கட்சியின் தலைவரான திரு வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்கள் திரும்பவும் பிரதமராகித் தமது மந்திரிசபையை ஆக்கிவருகின்ருர். இவ்வாருகப் பிரித்தானியின் யுத்தகாலப் பிரதமரெனப் பேராய்அறியப்படுகின்ற திரு. வின்ஸ்றன் சேர்ச்சில்அவர்கள் ஆறுவருடங்களின்பின் மீளவும் பிரதமராகி அரசுநடத்த வந்திருக்கின்ருர். பாராளுமன்றத்திலே தற்போது இவர் கட்சியினராய் 321 பேரும். தொழிற்கட்சியினராய் 294 பேரும், லிபறல்கட்சியினராய் 6 பேரும், ஏனையகட்சியினராய் 3 பேரும் இருக்கின்றனர். அதனல் எதிர்க்கட்சியினர் தொகையைக்காட்டிலும் இவர்கட்சியிலே 18 பேர் மேலதிகமாக இருக்கின்றனர். இன்னும்தொழிற்கட்சி அரசாங்கத்தாலே நீக்கிவிடப்பட்ட சர்வகலாசாலை ஸ்தானங்கள் பன்னிரண்டும் விரைவிலே சேர்க்கப்பெற்று மேலும் பன்னிருவர் இவர்கட்சியில் சேர்ந்துகொள்வர். ஆதலால், கடந்த பதினெட்டு மாதங்களிலும் ஆறு பேரையே மேலதிகமாகக் கொண்டு [illegible] ம் மூட்டுடன் அரசுநடத்திவந்த தொழிற்கட்சியைக்காட்டிலும் தற்போதைய நிலைமையிலே கன்சர்வேற்றிவ்கட்சி அதிகம்முட்டின்றி நன்ருகமூச்சுவாங்கி அரசுநடத்தக்கூடியதாய் இருக்கின்றது. பார்சீக எண்ணெய்த்தகராறும், எகிப்திய சுவெஸ் தகராறும், டலர்த்தட்டுப்பாடும், பிறவும் ஒன்றின்பின்ஒன்ருய் ஏற்பட்டுப் பிரித்தானி பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தவேளை திரு. வின்ஸ்றன் சேர்ச்சில் பிரதமராகி அரசுநடத்தவந்திருக்கின்ருர். இரண்டாவது உலகமகா யுத்தத்திலே அத்துணை பெருங் கலக்கங்கள், கஷ்டங்களின்மத்தியிலே பிரித்தானிய அரசியற்சுக்கானைப் பிடித்து எல்லாவற்றையும் ஒருவாறுசமாளித்து வெற்றிமாலைசூடியஇவர் தமதுசாதுரியத்தாலும், அரசியற் தந்திரத்தாலும் இந்தவேளையும் பிரித்தானிய மக்களின் பல்வேறு சங்கடங்களைப்போக்கி அவர்களுக்கும், உலகத்துக்கும் சுபீட்சத்தைக் கொண்டுவருவாரென நம்பியிருக்கலாம்.

***********************

## கிறிஸ்மஸ் விழாச் சிறு கதைப் போட்டி

அடுத்துவரும் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டுச் “சத்தியவேத பாதுகாவலன்” சிறுகதைப் போட்டிஒன்று நடத்தப்படவிருக்கிறது. இப்போட்டியில் எவரும் சேர்ந்துகொள்ளலாம். கதை கிறிஸ்மஸ் சம்பவத்தைத் தழுவியதாய்ப் “பாதுகாவல” னிலே ஒருபக்கத்தில் அடங்கத்தக்கதாய் இருக்கவேண்டும். எழுதியனுப்பப்படும் முதற்தரமான மூன்று கதைகளுக்கும் முறையே 10 ரூபா, 5 ரூபா, 2 ரூபா 50 சதம் வெகுமதி அளிக்கப்படும். மூன்றும் முறைமுறையாகப் பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்படும். மார்கழிமாதம் 1-ந் திகதிக்கு முன் கதைகள் பின்வரும்விலாசத்துக்கு அனுப்பப்படவேண்டும். மேல்உறையிலே “கிறிஸ்மஸ்விழாச்சிறுகதைப்போட்டி” என்று குறிக்கப்படவேண்டும். கதைகள் திருப்திகரமாய் வந்தால் மூன்றுமாதங்களுக்கு ஒருமுறை இவ்வித போட்டிகள் நடத்தப்படும்.

மனேஜர்

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## சுதேச வர்த்தமானம்

### குருத்துவ வைரயூபிலி

கொழும்பு, சஞ்சூசையப்பர்கல்லூரியின் மூன்ருவதுதலைவராய், முன்னர் சென்பேணட்குருமடத்தின் அதிபராய் விளங்கியிருந்தவரான வண. எமில்நிக்கொலஸ்சுவாமியவர்கள் தாம் குருத்துவ அபிஷேகஞ்செய்யப்பெற்ற அறுபதாம்வருடநிறைவாகிய குருத்துவ வைரயூபிலிவிழாவைக் கார்த்திகை மாதம் 1-ந்திகதியாகிய இன்று கொண்டாடுகின்ருர். யூபிலிநாயகரின் முந்திய குருத்துவமாணவர்களும், சஞ்சூசையப்பர் கல்லூரியிலே அவரது மாணவர்களும், மற்றும் அபிமானிகளும் ஒன்றுசேர்ந்து அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பத்திரிசியார் கல்லூரி

# 6-ம் வகுப்பிற் சேரப் பரீட்சை .

சம்பத்திரிசியார் கல்லூரியில் 1952-ம் வருடத்தின் 6-ம் வகுப்பில் சேரவிரும்பும் மாணவர்களைத் தெரிவுசெய்வதற்காக இம் மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி துவக்கம் கல்லூரியில் ஓர் பரீட்சை நடக்கும். 1939-ம் ஆண்டு தைமாதம் 1-ந் திக்திக்குப்பின் பிறந்த எவ்வித பாடசாலை மாணவர்களும் இப்பரீட்சைக்கு வரலாம். பரீட்சை 5-ம் வகுப்புப் பாடங்களிலே நடைபெறும். தெரியப்பட்ட மாணவர்களின் பெயர்கள் மார்கழி மாதம் முடியமுன் அறிவிக்கப்படும். அதன்பின் வேறொருவரும் 6-ம் வகுப்புக்குச் சேர்க்கப்பட மாட்டார்கள். இப்பரீட்சையைப்பற்றிய முழுவிபரம் அறிய விரும்புவோர் கல்லூரித் தலைவருக்கு எழுதவும்.

---

தொண்டுகளுக்கெல்லாம் தகுந்தஓர் பாராட்டாகவும், ஞாபகார்த்தமாகவும் அவரதுஎண்ணெய்வர்ணப் பிரதிமைப் படமொன்றை ஸ்தாபிப்பதற்கான ஆலோசனை நடக்கின்றது.

### பிரதமரும் மகனும் திரும்பினர்

நல்லெண்ணத்தூதாகப் பர்மாவுக்கும், ஆஸ்திறேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் சென்றிருந்த பிரதமர் டி. எஸ். சேனநாயக அவர்கள் தமது புதல்வரான கமத்தொழில்மந்திரியார் டட்லிசேனநாயக அவர்களோடும் ஏனையோருடனும் சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஆகாயவிமானத்திலே சேமமாகக் கொழும்புவந்துசேர்ந்தனர். இரத்மலானைவிமானநிலையத்தில் மந்திரிமாரும், பாராளுமன்றஅங்கத்தவர்களும், மற்றும் பிரபலஸ்தர்களும் காத்துநின்று அவரை வரவேற்றார்கள்.

### கவர்னர்—ஜெனறலின் விஜயம்

கவர்னர்-ஜெனறல் சோல்பறிபிரபு அவர்கள் வருகிற 5-ந்திகதி திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்து இங்கேநான்குநாள் தங்கவிருக்கின்றார். அன்றுகாலை யாழ்ப்பாணறெயில்வே ஸ்றேஷனிலே மேயரும், பாராளுமன்ற அங்கத்தவர்களும், மற்றும்பிரதம உத்தியோகஸ்தர்களும் அவரை வரவேற்பார்கள். அன்றுதினம் அவர் நல்லூர்ப் புடவை நிலையம், கொழும்புத்துறை வயோதிகர்சாலை, பருத்தித்துறைப் பட்டினசங்க காரியாலயம், தொண்டைமானாற்றுக் கடல்நீர் அணைக்கட்டுத்திட்டம் ஆதியவற்றைப் பார்வையிட்டுப் பிற்பகல் 5-15 மணிக்கு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து திருக்குடும்ப கன்னிகாமடத்திலே மாதிரிப் பாலர்வகுப்புப் பகுதியைத் திறந்துவைத்துப் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரிப் பழையமாணவர் விருந்துக்குச் சமுகமளிப்பார். மறுநாள் செவ்வாய்க்கிழமை பலாலி ஆசிரியபயிற்சிக் கல்லூரியையும், காங்கேசன்துறைப் பட்டினசங்கத்தையும், யாழ்ப்பாண விமானநிலயத்தையும், தோலகட்டிக் கமப்பண்ணையையும், கந்தர்மடத்தில் சுருட்டுத்தொழிற்சாலையொன்றையும்பார்வையிட்டபின் கச்சேரியில்நடைபெறும் சிற்றுண்டிஉபசாரணையில் பங்குபற்றிய தன்மேல் நகரமண்டபத்தில் நடைபெறும் நடனக்கச்சேரிக்குச் சமுகமளிப்பார். புதன்கிழமைகாலை ஊர்காவற்றுறைப்பகுதிக்கு விஜயஞ்செய்த பின் மானிப்பாய்ப் பட்டினசங்க நூல்நிலயம்ஒன்றைத் திறந்துவைத்து, மானிப்பாய்ச் சேமிப்புநிலயத்திலே யாழ்ப்பாணப்பிரிவின் சேமிப்பு மகாநாட்டிற்குச் சமுகங் கொடுப்பார். நான்காம்நாள்மாலை கொழும்புக்குப் பயணமாகுமுன் சாவகச்சேரிக்கு விஜயஞ்செய்வார்.

### கருமாதிகாரியின் மாற்றம்

ஊர்காவற்றுறைக் கருமாதிகாரியாய் (டி. ஆர். ஓ) இருந்துவந்த திரு. எக்ஸ். எம். செல்வத்தம்பு அவர்கள் முல்லைத்தீவுக் காரியாதிகாரியாக மாற்றப்பட்டிருக்கின்றார். முல்லைத்தீவுக் காரியாதிகாரியாய்இருந்த திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் புத்தளத்துக்கு மாற்றப்பட்டிருக்கின்றார்.

## தமிழின் வளர்ச்சி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணர்ந்தயப்பானியர் உரையாடுமிடத்து, ஆங்கிலத்தை யப்பான் மொழியுடன் கலந்தா உரையாடுகின்றனர்? தமிழிற்குத்தானோ இந்தச்சீரழிவு? தமிழ் நாட்டில் இச்சீர்கேடு மல்கியுள்ளதால, நாம் அதனை உணராதிருக்கின்றோம். பிறநாடுகளிலிருந்து நம்நாட்டிற்கு வருபவர் அதை நன்குகுறிக்கின்றனர். நம் எண்ணங்களைத் தமிழில் வெளிப்படுத்தும்பொழுது, பிறமொழிக் கலப்பின்றி வெளிப்படுத்த முயல்வோமாகில், நம் மொழி வளம்பெறுதற்கும், நம் இலக்கியம் உயர்வடைதற்கும் வழிகாட்டுவோம்.

(தொடரும்)

## பாடசாலைக்கோணம்

வண. சுவாமியாரவர்கட்கு!

"சத்தியவேத பாதுகாவல"னில் வெளியாகும் "பாடசாலைக் கோணம்" எனும் தலையங்கத்தைக்கொண்ட கட்டுரையிலே 6-9-51-இல் வெளிவந்த பிரதியில் தாங்கள்கேட்ட கேள்விக்கு மறுமொழி யாதெனில்: அவ்வளவு வில்லங்கமில்லாத தங்கள்கேள்விகளுக்குப் பாடசாலைமாணவர், மாணவிகள் எவ்வளவோ நீண்ட வியாக்கியானத்துடன் அர்த்தமற்ற விடைகளை எழுதி வில்லங்கப்படுவதற்குக் காரணம், பாடசாலை ஆசிரியர்கள் வேதஅறிவிற்குரிய பாடங்களைப்பற்றி அறிவூட்டுவதில் எடுத்துக்கொள்ளும் ஊக்கமின்மையேபோலும். ஆங்கிலம்படித்த சில ஆசிரியர், ஆசிரியைகள் வேதஅறிவை விர்த்தியாக்கும் பத்திரிகைகளைப் புறக்கணித்துவிட்டுத் தற்காலநவீன காதற்போக்கான பத்திரிகைகளையே ஆதரிக்கின்றார்கள்.

இஃதுஇவ்வாறாயின் அவர்களால் கல்விபயிற்றபடும் மாணவர் வேதஅறிவிற்சிறந்து வளர்வது எங்ஙனம்? ஆகவே......

தங்கள் பணிவுள்ள
ஓர் பழைய மாணவன்
S. R.

பழையமாணவன் கூறியவற்றை நாம் சிறிதேனும் அங்கீகரியா விட்டாலும், எமது ஆசிரியர்களுக்கு எச்சரிக்கையாக இதைப் பிரசுரிக்கிறோம்.

(B. E. A.)

* * *

"நத்தார்த் திருநாள்" என்ற விஷயத்தைப்பற்றி இரண்டுபக்கம்கொண்ட வியாசம், அல்லது "என் சீவியத்தின் வெளிச்சம்" என்ற தலையங்கங்கொண்ட கதை எழுதி அனுப்புவோருடைய திறமான வியாசமும், கதையும் பாதுகாவலனில் பிரசுரிக்கப்படும்.

Rev. Fr. B E. Alfred, O.M.I.,
Bishop's House, Jaffna.

## ஞானோபதேசப்பரீட்சை
## —1951—

### பரீட்சை நடாத்தும்முறை

1. யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த எல்லாக் கத்தோலிக்க பாடசாலைகளிலும், 3-ம் வகுப்புத் தொடக்கம் S. S. C. வகுப்புவரையும் உள்ள எல்லாவகுப்புகளுக்கும் வருகிற கார்த்திகைமாதம் 21-ந் திகதி புதன் கிழமை 9-30 மணி முதல் ஞானஉபதேசப் பரீட்சை நடைபெறும். இப் பரீட்சையில் மேற்கூறிய வகுப்புகளில் உள்ள சகல கத்தோலிக்கபிள்ளைகளும் பங்குபற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

2. ஒவ்வொரு பாடசாலையின் தலைமைஆசிரியரும் தமது பாடசாலையிலுள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் பெயர்களை வகுப்புவகுப்பாக ஒரு கடதாசித்துண்டில் குறிக்கவேண்டும். ஒவ்வொருவகுப்புக்கும் ஒரு புறம்பான கடதாசி உபயோகிக்கவேண்டும். இத்துண்டுகளில் அவ்வவ்வகுப்பிலுள்ள எல்லாக் கத்தோலிக்க பிள்ளைகளின் பெயர்களும் இருக்கின்றனவோ வென்று கட்டளைக்குருவானவர் பார்த்துக் கைச்சாத்திடுவார்.

3. பிள்ளைகள் எழுதுவதற்கேற்ற இடவசதிசெய்வதும், தேவையான கடதாசி, பேனை, மை முதலானவற்றைப் பிள்ளைகள் வைத்திருக்கப்பண்ணுவதும் தலைமைஆசிரியருடைய கடமையாகும். மூன்றாந்தரமாணவர் விடைகளை வினாப்பத்திரங்களிலேயே எழுதவேண்டும்.

4. விடைப்பத்திரங்களின் வலப்பக்க மேற்புறத்தில் தங்கள்பெயர், வகுப்பு, பாடசாலை முதலியவற்றைக் கவனமாய்க் குறிக்கவும், இடப்பக்கத்தில் போதிய வெளிவிட்டு விடைஎழுதவும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும். சாதாரண கொப்பிக்கடதாசி உபயோகிக்கவேண்டும்.

5. கட்டளைக்குருவானவர் தமது பாடசாலைகளில் நடாத்தப்படும் பரீட்சையைத் தாமேகண்காணிப்பதுவிரும்பப்படத்தக்கது. இவர் தாமேகண்காணிப்பது வசதியீனமென உணருவாராயின், தமக்குப்பதிலாய்நம்பிக்கையான ஒருவரைக் கண்காணிப்பதற்கு நியமிப்பார்.

6. ஒவ்வொரு பாடசாலையிலும் ஒழுங்குகளின்படி பரீட்சை நடத்துவது கட்டளைக்குருவானவரது அல்லது அவரால் நியமிக்கப்படும் கண்காணிப்பவரது கடமையாகும்.

7. கண்காணிப்போர் தங்கள் கடமையை நிறைவேற்றப் பாடசாலையின் ஆசிரியர்கள் உதவிபுரிவார்கள்.

8. தமக்குக் குறிக்கப்பட்டிருக்கும் பாடசாலைக்குவேண்டிய வினாப்பத்திரங்களை ஏலவே கட்டளைக்குருவானவரிடத்திலிருந்து கண்காணிப்பவர் பெற்றுக்கொள்ளவேண்டும்.

9. கார்த்திகைமாசம் 21-ந் திகதி காலை 9-15 மணிக்கு 2-ம்பத்தியில் குறிக்கப்பட்டிருக்கும்பத்திரத்திலுள்ள பிள்ளைகளுடைய பெயர்களைக் கூப்பிட்டுச் சமுகமாயிருப்போரின் பெயர்களுக்குஎதிரே ( × ) இப்படி அடையாளமிடவேண்டும்.

10. பின்பு, பிள்ளைகளினதும் ஆசிரியர்களினதும் சமுகத்தில் வினாப்பத்திரங்களிருக்கும் உறையைப்பிரித்து வினாப்பத்திரங்களை எடுக்கவேண்டும்.

11. கண்காணிப்பவர் வினாப்பத்திரங்களைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பார். ஆனால் வினாக்களைப்பற்றி யாதொரு விளக்கமும் கொடுக்கமாட்டார்.

12. பரீட்சைநேரத்தில் புத்தகங்கள் அல்லது குறிப்பு எதுவும் வைத்திருத்தல், ஒருவரோடொருவர் சம்பாஷித்தல், எவருக்கும் உதவிசெய்தல், எவரிடத்திலும் உதவிபெறுதல் ஆதியன முற்றாய் விலக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பாடசாலை ஆரம்பமாகுமுன்னரே கண்காணிப்பவர் தெளிவாக மாணவர்களின் விசேஷ கவனத்துக்குக் கொண்டுவருவார். இந்தப்பிரமாணங்களை மீறும் பரீட்சார்த்தியைக் கண்காணிப்பவர் பரீட்சையிடத்திலிருந்து நீக்கிவிடவேண்டும். பரீட்சைநடக்கும் வேளையில் எவ்விதமான சத்தம் சந்தடியும் இருத்தல் கூடாது.

13. பரீட்சைவினாக்கள் கொடுக்கப்பட்டபின்னர் பரீட்சைஅறைக்குவரும் எந்தமாணவருக்கும் பரீட்சையில் பங்குபற்ற உரித்தில்லை.

14. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் கொடுத்தநேரத்தை எந்தமுகாந்திரத்தையிட்டாவது கூட்டப்படாது.

15. எந்தப்பரீட்சார்த்தியாவது தனது வகுப்புக்குரிய பரீட்சைமுடிந்தபின்பேயன்றிப் பரீட்சை அறையிலிருந்து வெளியேசெல்லக்கூடாது.

16. பரீட்சைமுடிந்த வகுப்புப்பிள்ளைகள் பரீட்சைமுடியாது விடையெழுதிக்கொண்டிருக்கும் ஏனையபிள்ளைகளுக்குத் தொந்தரவுகொடுக்கக்கூடிய ஒழுங்கீனமானமுறையில்நடந்துகொள்ளாதபடி பார்த்துக்கொள்ளுதல் தலைமை ஆசிரியருடைய கடமையாகும்.

17. பரீட்சைமுடிந்தபின், ஆசிரியருடைய துணையோடு 2-ம்பத்தியில் குறிப்பிட்டுள்ள நாமாவலியில் சமுகமாயிருந்ததாகக் காட்டப்பட்டிருக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விடைப்பத்திரத்தை ஒப்பித்துள்ளாரோ எனக் கண்காணிப்பவர் பார்த்துக்கொள்ள வேண்டும். குறித்த நாமவலியில் விடைப்பத்திரம் கொடுத்துள்ள ஒவ்வொரு பரீட்சார்த்தியின் பெயருக்கும் எதிரில் (/) இப்படி அடையாளம் இடவேண்டும்.

18. வினாப்பத்திரங்களையும், விடைப்பத்திரங்களையும், 2-ம்பத்தியில் சொல்லப்பட்டிருக்கும் நாமாவலிப்பத்திரங்களையும் வகுப்புவகுப்பாகப் பிரித்துச் சேர்த்துக்கட்டி ஒவ்வொருவகுப்பிற்குமென அனுப்பப்படும் உறைகளில்வைத்துப் பிள்ளைகளதும் ஆசிரியரதும் சமுகத்தில் வினாப்பத்திரங்களுடன்வரும் துண்டால் வெளிமுத்திரையிட்டுத்தாமதமின்றிக் கட்டளைச்சுவாமியாரிடம் கொடுத்துவிடவேண்டும். இவர் கீழேகாணப்படும் விலாசத்துக்கு அனுப்பிவைப்பார்.

கவனிப்பு:—

மூன்றாம்வகுப்புத் தொடக்கம் S. S. C. வகுப்பு வரையுமுள்ள கத்தோலிக்க பிள்ளைகளின் தொகையை வகுப்பு வகுப்பாகக் குறித்து 8-11-51-க்குமுன் அனுப்பிவைக்கும்படி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**T. A. J. Mathuranayagam**
*Gen. Manager, R. C. Schools.*
Jaffna 29-11-51.

### வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சென்றஐப்பசிமாசத்திலே வாழ்க்கைச்செலவுப்புள்ளி 282. அதாவது முந்தியபுரட்டாசியிலும் 3 புள்ளியாலே அதிகரித்திருக்கின்றது. இந்தமூன்று புள்ளியும் அதிகரிக்கக்காரணம் புடவையின் விலையேற்றமே. அதிலும் விசேஷமாய் இந்தியபுடவையின்விலை அதிகரித்தமையேயாகும். இன்னும் சென்றமாதத்திலே மாமிசம், தேங்காய், மிளகு, எலுமிச்சம்பழம் ஆதியனவற்றின்விலையும் அதிகரித்துள்ளது.

### நகரசங்க தேர்தல்

வருகிறமார்கழிமாதம் யாழ்ப்பாண நகரசங்க பிரதிநிதிகளின்தேர்தல் நடைபெறவிருப்பதையிட்டு அபேட்சகர்கள் தங்கள்நியமனபத்திரங்களைச் சமர்ப்பிக்குந்தினம் நாளை 2-ந்திகதி வெள்ளிக்கிழமையாகும். பதினைந்து வட்டாரங்களுக்குமாக 35 பேர்வரையில் போட்டியிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவிலும் - நினைவிலும்

(வாழைக்குட்டி வரைவது)

என்னகாரியம்! வாழைக்குட்டியைச் சிலவாரங்களாகக் காணேமே என்றாம் ஒருவர். பாவம்! ஆராவது பிடுங்கியெறிந்து விட்டனரோஎன்றாம் வேறொருவர். இந்தவாழைக் குட்டி ஓர்இதரையோ, கதலியோ என்றாம் ஹாஸ்யமாய் இன்னொருவர். குட்டி ஆட்டைமுதலாய்அவிழ்த்து விட முடியாமலிருக்கிறதே இந்தக் குட்டிவாழையாலே என்றனராம் மற்றொருவர். இவைகளையெல்லாம் சொல்லக்கேட்டதே வாழைக்குட்டி ஓர்குறுஞ்சிரிப்புடன் ஒருசலாம் போட்டுவிட்டு அப்பாலே சென்றதாம்.

* * *

நிற்க, ஞானப்பிரகாசசுவாமிகளின் பூதவுடம்பும் மண்ணிலேகடைசியாக மறைந்துவிட்டது. ஆனல், அவரது குன்றாப் புகழுடம்போ குன்றிற்தீபம் போல இன்றும் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. ஆமாம், சமயத்திற்காகவும், தமிழ்மொழிக்காகவும், அல்லும் பகலுமாக அரும்பணியாற்றிவந்து மாணத்திரையில் மறைந்துபோன தமிழ்ப்பெரியார்களுள் சுவாமியவர்களும் ஓர்மகிமைவாய்ந்த ஸ்தானத்தை வகித்துக்கொண்டே இருப்பார் எனலாம். ஆம், "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றார் திருவள்ளுவனாரும். சுவாமிகளைப்போலத் தமிழுலகில் இன்னும்அநேகர் புகழொடு தோன்றிப் பிரகாசிப்பார்களாயின் அது தமிழன்னைசெய்த தவப்பலன் என்றே சொல்லலாம்.

* * *

அதெல்லாம்போக, சுவாமியார் சீவந்தராயிருந்த காலத்திலே சமய தொண்டும், தமிழ்த்தொண்டுமாக இருஅருமையான தொண்டுகளைஎவருமறியப் பெருமையாக நடாத்திவந்தார்அல்லவா? இப்போது அவற்றின் பாடு என்னவாயிற்று?என்று ஆராவது வாழைக்குட்டியை வினவினல் "பழம் நழுவிப் பாலில்விழுந்த" பாடுதான் என்றே அது பதிலளிக்குமாம். என்ன பழமா? பாலா? ஒன்றுமாய்ப் புரியவில்லையேஎன்று யாராவதுசொன்னல் பாலில்விழுந்ததாம், பழம்நழுவியென்றே அதுதிரும்பவும் சொல்லுமாம்.

* * *

சுவாமியார்நடாத்திய சமயத்தொண்டினை—ஏன்வெளிவெளியாகச்சொல்லிவிடுகிறேன்—அந்தநல்லூர்மீசாம் சுவிசேஷத்தொண்டினை இன்று மற்றோர் சுவாமியார் கையேற்று நடாத்திவருகின்றார். ஆரம்பத்திலே இவர்கொஞ்சம் பதறினார்என்று சிலர்சொல்லுகின்றனர். ஆமாம், ஞானப்பிரகாச சுவாமியாரின் ஸ்தானத்தை வகிக்கிறதென்றால் ஆர்தான் பதறுதிருப்பர்? என்றாலும் சுவாமியவர்களின் பெயரைச்சொல்லி, அவரது தர்மத்தின் புனிதமான அடிச்சுவடுகளைப் புனிதமாகக் கடைப்பிடித்துவருகின்ற இவரும் அவரது ஞானமக்களிடையே மற்றோர் பெரியசுவாமியாரென அறியப்பெற்றுவருகின்றாரென்றே பலருஞ் சொல்லுகின்றனராம்.

* * *

நல்லூர்மீசாமிலே ஞானப்பிரகாச சுவாமியார் குபேரசம்பத்திடன் வாழ்ந்தவர்அல்ல. சிவிகைமேல்அமர்ந்து பவனிசென்றவர்அல்ல. செம்பொற் தவிசிலே கண்ணயர்ந்தவர்அல்ல. ஆனல், தாரித்திரத்தின்மடியிலேயே அவர் தவழ்ந்துகொண்டிருந்தார். எத்தனையோதடவைகளிலே அவர்பசியால்வருந்திப் பட்டினிகிடந்தார். தாகத்துக்குக்குடிக்கத் தண்ணீர்தானும்இல்லாது தவித்துவந்தார். அம்மம்ம! அவர் நல்லூர்மீசாமிலே அனுபவித்த கஷ்டங்களை—இடுக்கண்களை—வறுமைசிறுமைகளை இன்றும்சிலவேளை எண்ணும்போது உள்ளம்இரங்குகின்றதாம்.

* * *

எந்தவிதமானகஷ்டங்கள் எய்தியபோதிலும், எத்தகையபெரும் இடுக்கண்கள் ஏற்பட்டபோதிலும், என்னதான் வறுமைசிறுமை இருந்தபோதிலும் அவைகளையெல்லாம் சுவாமியார் தம்மைஆட்கொண்ட அருட் பரஞ்சோதியாகிய கிறீஸ்துபெருமானுக்காக முகமலர்ந்து நல்லமனதாய்ஏற்று, முறையீடின்றிப் பொறுமையாய்நடந்து, தமது வேதபோதக தொண்டுகளை வீரத்துவமாகநடத்தி வெற்றியடைந்து வரலாயினர். இப்போது அவரிடமாக இருந்துவருகின்ற சுவாமி ஜே. ஏ. இராசநாயகம் அவர்களுக்கும் இந்தக்கஷ்டங்கள், இடுக்கண்கள், வறுமைசிறுமைகள் இல்லாமலில்லையாம். என்றாலும், இறைவன் திருவருளால் இவர்தலைமையிலே நல்லூர்மீசாமில், ஞானப்பிரகாசஞ் சுவாமியார் இறந்தும் இறவாதவிதமாய், எல்லாம் நல்லமாதிரியாய் நடந்துகொண்டிருக்கிறதாம்.

* * *

அன்றொருநாள் வாழைக்குட்டி பொழுதுபோக்காக எங்கேயோ ஓர் இடத்திலுட்கார்ந்து வானிலைசகேட்டுக்கொண்டிருந்ததாம். அப்போது பழைபநண்பர்ஒருவர் "கண்டுகனகாலம்" என்றுசொல்லிக்கொண்டே அதன்பக்கத்தில்வந்து மெல்லெனஉட்கார்ந்துகொண்டனராம். பிறகுதெரியாதா, இருவருமாகப் பலதும்பத்தும் பேசிக்கொண்டிருக்கையில், அவர்இருந்தாற்போல் "ஒருகதைகாணும்" என்றாராம். "என்னகதை, சரிசொல்லும் பார்ப்போம்" என்றதாம் வாழைக்குட்டியும். அப்போதுஅவர் "உங்கள் சுவாமி ஞானப்பிரகாசம் இருந்தாரே; அவரைப்போலத் தமிழ்ப்பணி ஆற்றும் கத்தோலிக்கக்குருவானவர் எவரேனும் தற்போது இருக்கின்றாரா?" என்றாராம். இதைக்கேட்டதும் வாழைச்குட்டிக்குத் திடீரென ஏதோ ஞாபகத்துக்குவந்து, ஆம், ஆம் என்று அது காம்பீரமாக மொழிந்ததாம்.

* * *

இடையிலே வாழைக்குட்டி மற்றொன்று விரிக்கிறதேயென்று எவரும் குறைவிளங்காதபடிகேட்டு, மற்றொன்று எடுத்துக்கூறுகின்றதாம். அதாவது, ஞானப்பிரகாசசுவாமிகளுக்குச் "சொற்கலைப்புலவர்" என்னும் பட்டத்தைச் சன்மானித்தது, அன்றுயாழ்ப்பாணத் தமிழ்மன்றம். இன்று சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப்போசிரியர் உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களுக்குச் "சொல்லின்செல்வன்" என்னும்பட்டத்தைச் சன்மானித்திருக்கிறது, தென்னிந்தியாவிலுள்ள தமிழ் வளர்க்கும் தருமபுரஆதீனம். பல ஆண்டுகளாகப் புலவர்களை ஆதரித்துப் பரிசில்கள்வழங்கிவரும் தருமபுரஆதீனத்தார் ஓர்பெரும்புலவர் சேதுப்பிள்ளை அவர்களை இவ்விதம் கௌரவித்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்க ஓர்செயலேயாம்.

* * *

நிற்க, அன்று திருநெல்வேலியிலே பெருமிதமாக நடந்தேறிய நான்காவதுதமிழ்விழாவிலே இந்தியாவிலும், இலங்கையின்பல்வேறு இடங்களிலுமிருந்து பெருந்திரளாக வந்துகூடிய தமிழ்ப்பேரறிஞர்கள், பேரபிமானிகளின் பேரவையிலே "சங்கஇலக்கியத்தின் சிறப்பியல்பு" என்னும் விடயமாய் எல்லோருமே வியக்கும்படியாக—எவ்வெவருமே நயக்கும்படியாகப் பொழிந்தருளினர் பெருஞ்சொற்பொழிவுஒன்றைக் கத்தோலிக்க குருசுவாமி ஒருவர். அப்பேரவைக்குத் தலைமைவகித்து அவரைச் சகலர்க்கும் அறிமுகஞ் செய்துவைத்தார், "சொல்லின்செல்வன்" உயர்திரு. சேதுப்பிள்ளைப்புலவர். எ[illegible]?

* * *

தாம் சபாநாயகம்என்றார். ஆனல் இப்போது சபையிலே சொற்பொழிவு ஆற்றப்போகிறவரோ தனிநாயகம்என்றார். அன்னார் தனிநாயகமாய் இலங்கும்போது தாம்சபாநாயகமாக இருப்பது எங்ஙனம்? எனப் பகர்ந்தார். சமீபத்திலே, பலநாடுகளுக்கும் "தமிழ்த்தூது" சென்று, அகிலஞ்சுற்றிவந்திருக்கும் வண. தனிநாயகம்சுவாமிகளின் ஆற்றலையும், தமிழ்அறிவையும் வாயாரப்புகழ்ந்தார். நல்லூர் ஞானப்பிரகாசஅடிகள் மறைந்தபோது, அவரிடமாகத் தமிழ்ப்பணியாற்ற மற்றோர் கத்தோலிக்க குருவானவர் இல்லையேயென்று இருந்தகுறையை இப்போது நீக்கி அவருடைய உயரிய ஸ்தானத்தை இன்றுவகித்திருக்கின்றார் அறிஞர் தனிநாயகஅடிகள்என்று கரகோஷத்தினமத்தியில் தமதுமுன்னுரையைக் கண்ணியமாகமுடித்தார் உயர்திரு. சேதுப்பிள்ளை அவர்கள்.

(தொடரும்)

## கிராம முன்னேற்ற சங்கம்

துள்ளுகுட்டி குடியிருப்புக் கிராம முன்னேற்றசங்க முதலாவது பொதுக் கூட்டம 25-10-51 வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்குத் துள்ளுகுட்டி குடியிருப்புத் தேவமாதா கோவில் வீதியில் அமைக்கப்பெற்ற அலங்காரப்பந்தரில் மன்னர் உதவி ஏசன்றர் A. E. கோகர்லி மொறக்கொட அவர்கள் தலைமையில் ஆரம்பமானது. அவ்வமயம் பேசாலைக் கட்டளைக்குரவர் வண. A. லெபேர்ன் சுவாமியார், அதிகாரம் திரு. N. M. அப்துல்காசிம் மரக்காயர் S. R. D. O., R. D. O. ஆகியோரும், துள்ளுகுட்டி குடியிருப்பிலும், அதன் அயற்கிராமங்களிலும் உள்ளவர்களிற் பலரும் சமுகமளித் திருந்தார்கள். 1-வது சங்கஉத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் தலைவரால் கிராமமுன்னேற்ற சங்கம்என்றால் என்ன? சங்கஅங்கத்தவரின்கடமைகள்எவை? என்பனபற்றி அழுத்தமாக எடுத்துக்கூறப்பட்டன. அவரைத் தொடர்ந்து S. R. D. O. அவர்கள் "அரசாங்கம் இச்சங்கமூலம் எப்படி சனசமூகத்திற்கு உதவிசெய்கிறது? மனிதவாழ்க்கை எப்படி மேல்நிலை அடையமுடியும்? என்பனபற்றி அதிகந்தெளிவாகக் கூறினர். ஈற்றில் ஆசிரியர் T. செபமாலைஅவர்களின் நன்றியுரையுடன் கூட்டம்இனிதே முடிவெய்தியது.

— நிருபர்

## திருமதி சூசன் நீக்கிலாப்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

நம்பட்டணவாசராய், சுகாதார பரிசோதகராயிருந்து காலஞ்சென்ற திரு. ஜி. நீக்கிலாப்பிள்ளை அவர்களின் பாரியாரான திருமதி சூசன் நீக்கிலாப்பிள்ளை விருத்தாப்பிய நோய்கண்டு சென்ற 21-10-51 ஞாயிற்றுக்கிழமை காலை காலஞ்சென்ற துயரசெய்தி பலருக்குமே கவலையைத் தாலாயிற்று. மரிக்கும்போது இவவுக்குவயசு 67. இவ ஊர்காவற்றுறையிலே சட்டம்பியார் சுவாம்பிள்ளையெனப் பிரபலமாக அறியப்பெற்றிருந்த திரு. மனுவேற்பிள்ளை சுவாம்பிள்ளைஅவர்களின் புத்திரி. பிரக்கிராசியார் திரு. எஸ். ஜேம்ஸ், வைத்திய-சுகாதாரப்பகுதிப் பிரதம லிகிதராயிருந்து காலஞ்சென்ற திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற வண. எஸ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் சுவாமியார்என்பவர்களின் சகோதரி. கண்டிப்பகுதி ஐக்றிங் வித்தியாதரிசி திரு. என். அருட்பிரகாசம்அவர்களும், பலாலி விமானநிலையத்தில் கடமை பார்க்கும் திரு. என். ஜேம்ஸ் அவர்களும் இவவின்புதல்வர்கள். இவவின் புதல்வியைச சுகாதார பரிசோதகர் திரு. பி. எம். யோசெவ் அவர்கள் விவாகஞ்செய்திருக்கின்றார். இவ மிகுந்த தேவபக்தியுடையவவாய்த் தினமும் திவ்வியபூசைகண்டு, தினமும் பத்துப்பன்னிரு செபமாலை சொல்லிவந்ததுடன் தமதுபிள்ளைகளும் இளமை முதல் தினமும் திவ்வியபூசைகாணவும், செபமாலை அடிக்கடி சொல்லவும் பயிற்றிவிட்டிருந்தா. இவவுடைய பிரேதசேமமானது அன்றுசாயந்தரம் பலவிடங்களிலிருந்து இனசனர், மற்றும் சிநேகிதர், கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை மாணவர் ஆகியோர் பெருந்திரளாகக் கூடியிருந்த சமுகத்திலே அடைக்கலமாதாகோவிற் கட்டளைக் குரவர் வண. வில்லியம் யேசுதாசன் சுவாமியவர்கள் குருப்பிரசாதிகள் பதின்மர்சமேதராய் அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறி நிற்கச் சிறப்பாய் நடந்தேறியது. இவவைஇழந்து துன்புற்றுவருந்தும் புத்திரர், புத்திரி, மருகர், சகோதரர், மற்றுமுள்ள இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

## மரணசங்கதி

கரவெட்டிவாசரும், குடத்தனை உபதபாற்கந்தோர்ப் போஸ்ற் மாஸ்றருமான திரு. ஏ. என். எசக்கியேல்அவர்கள் தமக்குண்டான இரத்தாசய நோய்காரணமாகச் சென்ற 19-10-51 வெள்ளிக்கிழமைகாலை காலஞ்செல்லலாயினர். இவர் சம்பத்திரிசியார் கல்லூரியிலும், மட்டக்களப்பு சம்மிக்கேல் கல்லூரியிலும் கல்விபயின்று, மலாய்நாட்டிலும், இலங்கைத் திறைசேரியிலும் உத்தியோகம் வகித்திருந்து பின்னர் சென்ற 14 வருடங்களாகக் குடத்தனைப் போஸ்ற்மாஸ்றராகக் கடமைபார்த்துவந்தார். இவர் தயை, தாட்சணியம், பொறுமை ஆதியாம் சுகுணங்களும், புன்முறுவல் பூத்த வதனமுமுடையவர். இரணதண்டிகைக் கனகராயமுதலியார் வழித்தோன்றலும், அரைநூற்றாண்டுக்குமேல் வதிரி அர்ச். அந்தோனியார் கோவில் மூப்பருமாக விளங்கியிருந்த திரு. நீக்கிலாப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை அவர்களின் பௌத்திரர். பலாலி அரசினர் சாதனகழகத் தலைமைஆசிரியர் திரு. வ. இராயப்பு, வதிரி திருஇருதயகல்லூரி ஆசிரியர் திரு. வ. அந்தோனிப்பிள்ளை, இரத்தினபுரிப் போலிஸ்பகுதியைச்சேர்ந்த திரு. வ. கிறிஸ்தோப்பர் என்பவர்கள் இவரின்மைத்துனர். இவரின் பிரேதசேமம் அன்றுசாயந்தரம் இவரது ஏகபுதல்வர் வேதராசாவின் உடன்மாணவர், கல்லூரிஆசிரியர், இனசனர், சிநேகிதர் திரளாகக்கூடிய சமுகத்திலே தேசாசார, வேதாசாரமுறைகளுடன் புதியகல்லறையில் சிறப்பாகநடந்தேறியது. இவரை இழந்து துன்புறும் மனைவியார், புதல்வர், மற்றும் இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றேன்.

R. I. P. — நிருபர்

## பெண்களும் சமையலும்

ஓர்பெண்பிள்ளை கீழ்த்தரகல்வியோ, மேற்தரகல்வியோ, சர்வகலாசாலைக் கல்வியோ கற்றிருக்கலாம்; ஆனல் அவள் கவர்ச்சிகரமாகத் தனதுஇல்லத்தை எப்படிப்பேணி வைத்திருப்பதென்றும், உணவைச்சரிவர எப்படிச்சமைப்பதென்றும் அறியாளாயின் அவள்கல்வியறிவு இல்லாதவளே என்று சமீபத்திலே ஓர்தேசிய கலாசாலைத் திறப்புவிழாவின்போது கஷெல்நகர கிறென் அதிமேற்றிராணியார் கூறியிருக்கின்றார். "ஆரம்பத்திலே அவர்கள் என்னபதவி வகித்திருந்தாலும் காரியமில்லை; கடைசியாக அதிகமானபெண்பிள்ளைகள் மனையாட்டிகளாகவே குறிக்கப்படுகிறார்கள்" என்றும் அவர் கூறலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணுவின் கடிதம்

சகோதர சகோதரிகளே!

நீங்கள் அண்ணுஎழுதும் கதைகள், பாட்டுகள், புதுமொழிகளை அதிகஆவலுடன் வாசிக்கிறீர்கள் என்று அறிகிறேன். அண்ணுவுக்கு இப்பொழுது சந்தோஷம் அதிகமாகி விட்டது. எனது இளஞ்சகோதரரும் பாலர்பக்கத்துக்கு எழுதத் தொடங்கி விட்டார்கள். வெகுதூரத்திலுள்ள பாப்பாமோட்டையிலிருந்து ஒருசகோதரி எழுதியகடிதமும், மிருசுவில் பாடசாலையில் படிக்கும் ஒருதம்பி எழுதிய ஆமைக்கதையும் உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்.

அண்ணுவுக்கு எழுதி அனுப்பப்படும் ஒவ்வொரு விஷயமும் பத்திரிகையில் வெளிவரும் என்று தம்பி தங்கச்சிமார் நினைக்கக் கூடாது. என்னில் கோபிக்கவும் கூடாது. சந்தர்ப்பத்துக்கு ஏற்கத் தகுதியான விஷயங்கள் வெளிவரும்.

செவிடர் சித்தங்கேணி போனகதை மற்ற வாரம் காண்பீர்கள்.

இந்தமாதம் ஆத்துமாக்களின்மாதம் என்பதை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். சுபம்!

உங்கள் அன்புள்ள
அண்ணு.

## அண்ணுவுக்குக் கடிதம்

அன்புநிறைந்த அண்ணு அவர்களுக்கு நமஸ்காரம் சொல்லித் தங்கைச்சிமாருள் ஒருத்தியாகிய நான் மிகுந்த பணிவாகத்தெரிவித்துக்கொள்ளுவது:—

பாதுகாவலனில் வெளிவருகிற பாலர்பக்க விஷயங்களைப் பார்த்துப் பரமானந்தம் கொள்ள லாயினேன். இதுகாலவரையில் இருந்து வந்த இந்தப் பெரிய குறை நீங்கியது மன்றி ஆரம்பத்திலே எங்கள் நல்ல மேற்றிராணி ஆண்டவர் அவர்கள் எழுதிய நல்மதிகளையும், மற்றப் பாட்டுகளையும் எங்கள் தலைமைஆசிரியர் படித்துக் காட்டி எங்களுக்கு அதன் மட்டில் அன்பான மதிப்பை எழுப்பியும் விட்டார்கள். அத்தோடு உங்களுக்கு இக்கடிதத்தை எழுதும்படி என்னைத் தூண்டியும் விட்டார்கள்.

இன்னும் ஆசைஅண்ணு!

இந்த நல்ல முறையைத் தொடர்ந்து நடத்தி, பட்டிக் காட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் என்போன்ற உங்கள் இளஞ் சகோதரர்கள் எழுதிஅனுப்புங் கடிதங்களையும், கதைகளையும் வெளிப்படுத்தி எம்மை நல்ல முன்னேற்றப் பாதையில் நடத்துவதோடு பாலக சின்ன யேசுவைப் பின்பற்றி நடக்கவும் பழக்கி விடுங்கள். கடைசியாகப் பாலர் கழகத்தைத் தவருது படித்து வருவேனென்றும் உறுதி கூறி முடிக்கிறேன்.

தங்கள் தங்கைச்சி
அ. றேஸ்மலர்
பாப்பாமோட்டை

## ஆகாயத்தில் பறக்க விரும்பிய ஆமை

ஆமைஒன்று ஒருகுளத்தில் வசித்து வந்தது. அது தனது வீட்டையும் சுமந்துகொண்டு திரிவதில் அலுத்து விட்டது. அதற்கு அதன்வாழ்க்கையிற் கசப்பு ஏற்பட்டுவிட்டது.

ஒருநாள் அது தனது மந்தநடையில் நகர்ந்து சென்றுகொண்டிருக்கையில் வழியில் ஒருகழுகைச் சந்தித்தது. அதனிடத்தில் தன் குறையைச் சொல்ல விரும்பியது.

"நான் இனி ஒருநிமிஷமும் எனது வீட்டையும் சுமந்துகொண்டு நகர்ந்து கொண்டிருக்க முடியாது. நானும் உன்னைப்போல் ஆகாயத்திற் பறக்க விரும்புகிறேன். எனக்கு உதவிசெய்ய வேண்டும்" என்று இரந்து கேட்டது.

கழுகு:— சகோதரமே! நீ இயற்கையை மாற்றமுடியுமோ? உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமோ? நீ நகர வேண்டியதுதான். இதுதான் இயற்கை.

ஆமை:— இனி என்னுல்முடியாது. நான் பறக்கத்தான் வேண்டும். எனக்கு உதவிசெய்.

கழுகு:— சரி; நான் உன்னை ஆகாயத்தில் கொண்டுபோய் விடுகிறேன். நீ பற; உன்னுல் இயற்கையை மாற்ற முடியுமா என்று முயன்றுபார்.

ஆமை கழுகின் சொல்லின்படி நடக்க உடன்பட்டது. கழுகு ஆமையைத் தனது கால்களாற் பற்றிக் கொண்டு உயரப் பறந்தது. பின் ஆமையை நோக்கி இதோ உன்னை விடுகிறேன். நீ இயற்கையை மாற்று: அன்றேல் இயற்கை உன்னை மாற்றட்டும் என்று சொல்லித் தன் பிடியை விட்டது.

ஆமை தன் கால்களை நீட்டித் தன்னுல் ஆனமட்டும் அடித்தது. அதனுற் பறக்க முடியவில்லை. அந்தோ! பாவம் அது அதோகதியாகக் கீழே வந்து ஒரு பாரில் மோதிச் சுக்குநூருகி அவலமாய்ச் செத்தது.

இந்த ஆமையைப் போன்றவர்கள் அநேகர் பூமியில் இருக்கிருர்கள். அவர்கள் கடவுளின் நியதியை, அமைப்பை மதியாமல் நடந்துவருகிருர்கள். கடவுள் எம்மை எந்த அந்தஸ்தில் வைக்க விரும்புகிருரோ அந்த அந்தஸ்திலேஇருந்து தேவசித்தத்தை நிறைவேற்றத் தெண்டிக்க வேண்டும். உயரப்பறக்க வீணுக ஆசைப்படக் கூடாது. போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து. மாணவராகிய நாம் முயன்று படிக்கவேண்டும். இப்புத்தகப் பொதியைச் சுமக்க என்னுல் முடியாது. நான் ஆசிரியரைப் போலக் கதிரையிலிருந்து படிப்பிக்க வேண்டுமென்று துணியலாமா? பிரம்படிதான் கிடைக்கும். கவனம்!

யே. றெபேட்
சிரேஷ்ட பாடசாலை வகுப்பு
ரோ. க. பாடசாலை
மிருசுவில்

## பேரின்பம்

### மாலை, மாலை

என்ன மாலை — செபமாலை
என்ன செபம் — பத்திச்செபம்
என்ன பத்தி — தேவபத்தி
என்னதேவன் — யேசுதேவன்
என்ன யேசு — பாலயேசு
என்ன பாலன் — மரிபாலன்
என்ன மரி — கன்னிமரி
என்ன கன்னி — நித்தக்கன்னி
என்ன நித்தம் — மோட்சம் நித்தம்
என்னமோட்சம் — இன்பமோட்சம்
என்ன இன்பம் — பேரின்பம்.



## குடை

வட்டம் போட்டு விரிவாயே
மழையில் ஓடித் திரிவாயே
எட்டுக் கம்பி இல்லாமல்
எங்கும் குடைகள் நில்லாதே

* * *

வெய்யில் கண்டால் பிடிப்போமே
இல்லா விட்டால் தடிப்போமே
கையில் பிடித்து நடப்போமே
காட்டிக் காட்டிப் படிப்போமே

* * *

கொக்கைப் போலே உன்கழுத்து
கூனி இருத்தல் அழகன்ருே
பக்கத் தூணில் கொழுவிடலாம்
பாட்டி ஊன்றி நடந்திடலாம்

* * *

அம்மா குடைக்குக் கழுத்தில்லை
அதுவும் மழைக்கு உதவாது
சும்மா தூக்கித் திரியத்தான்
சுகமாய் இருக்கும் பெரியோரே!

— அமுதி

## பம்பாய் மிட்டாஸ்

மாதவனும், ரோகிணியும் செம்பியன்பற்றுத் திருநாளுக்குப் போனுர்கள். அவர்களின் தந்தையார் அவர்களின் கைச்செலவுக்காகத் தலைக்கு 25 சதம் கொடுத்திருந்தார். மாதவன், ரோகிணியையும் இழுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குப் போனுன். "அடி ரோகிணி! முதலில் உன்னிடத்தில் இருக்கிற காசைச் செலவழி; அது முடிந்தபின் நான் செலவழிக்கிறேன். சம்மதமா?" என்று கேட்டான் மாதவன். "அதற்கென்ன அண்ணு; கட்டிப்போட்டு அடித்தாலென்ன, அடித்துப்போட்டுக் கட்டினுலென்ன" என்று தன்சம்மதத்தைத் தெரிவித்தாள் ரோகிணி.

"முதலில் ஒரு 'கூல்ட் றிங்' அடிப்போம் வா" என்று இருவரும் ஒரு சர்பத்காரனை அண்டிப்போனுர்கள். ஓர் தட்டில் டம்ளர்களை வைத்து ஓர் சிவப்பு நிறத் தூள், தண்ணீர், ஐஸ் கட்டி, சீனி இவற்றை ஒன்ருய்க் கலந்து ஒன்றில் ஒன்று மாற்றி நுரை எழும்ப அடித்த வண்ணம் "கூல்ட் றிங்", ஐஸ் கலர், "போனுற் கிடையாது, பொழுது பட்டாற் கிட்டாது, ஓடிவா" என்று கத்திக்கொண்டிருந்தான் சர்பத்காரன்.

தட்டுகளும் டம்ளர்களும் தெரியாத வகையில் ஈக்கள் மொய்த்து ரீங்காரம் செய்துகொண்டிருந்தன. "அண்ணு! இது சுகத்திற் கேற்றதல்ல; இதைக் குடிப்பதால் வீணுக வியாதியைத் தான் தேடிக் கொள்ளுவோம்; இது நமக்கு வேண்டாம் வா" என்று ரோகிணி தன் தமையன் கையைப் பிடித்து இழுத்தாள். "ஓகோ, பிள்ளைக்குப் புத்தி பிடிபட்டிருக்கோ; சுத்த பைத்தியம்; ஏதோ குடித்துப் பார்த்தவள்போல் பிதற்றுகிருள்; உனக்கு வேண்டாவிட்டால் போடி. ஏய்! சர்பத், இப்படிக் கொடு ஒரு டம்ளர்" என்று கையைநீட்டி, ஒரு டம்ளரை வாங்கி வாயில்வைத்துக் குடித்தான்.

பின்னர் "கொடடி 5 சதம்" என்ருன் தங்கையைப் பார்த்து. ரோகிணி ஒன்றும் பேசாமல் சர்பத்காரனிடம் 5 சதம் கொடுத்தாள். அப்பொழுது "தம்பீ! ராசா!! போகிறவழிக்குப் புண்ணியமுண்டு. காலில்லாத ஏழை" என்று பக்கத்தில் ஒருகுரல் கேட்க, ரோகிணி திரும்பிப் பார்த்தாள். தொடையளவில் கால் அற்ற ஏழை முடமொன்று போவார் வருவாரிடம் கையைநீட்டிக் கெஞ்சிக் கொண்டிருந்தது. "அண்ணு! இப்படிப் பணத்தைக் கொடுத்து வியாதியை வாங்குவதிலும், இந்த ஏழைக்குக் கொடுத்துப் புண்ணியத்தைப் பெற்ருல் என்ன" என்று கேட்டாள் ரோகிணி.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 25-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(மத். 8: 23—27)

அக்காலத்தில் யேசுநாதர் ஓர் படகிலேறவே, அவருடைய சீஷர்களும் அவரோடேறினுர்கள். அப்போது திடீரென்று படகு அலைகளால்மூழ்கிப்போகும்படியானவிதமாய்க் கடலிற் பெரும்புயலுண்டாயிற்று. அவரோ நித்திரை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை அணுகி எழுப்பி: ஆண்டவரே, எங்களை இரட்சியும்; அழிந்து போகிருேமென்ருர்கள். யேசுநாதர் அவர்களை நோக்கி: அற்பவிசுவாசமுள்ளவர்களே! ஏன் பயப்படுகிறீர்களென்ருர். அவர் எழுந்து காற்றுகளுக்குங் கடலுக்குங் கட்டளையிடவே மிகுந்த அமரிக்கை உண்டாயிற்று. ஆகவே, அங்கேயிருந்த மனிதர் ஆச்சரியப்பட்டு: இவருக்குக் காற்றுகளுங் கடலுங்கீழ்ப் படிந்திருக்கின்றனவே! இவர் எப்படிப்பட்டவரோ! என்ருர்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

"ஓகோ! கோவிலுக்கு வந்தாற்போல் ஞாஞேதயம் பிறந்து விட்டதோ? இப்படித்தான் அப்பாவின் பணத்துக்கு வழிகாட்டப் போகிருள் இவள்" என்று தங்கையைக் கடிந்தான் மாதவன். ரோகிணி தன்னிடமிருந்த 20 சதத்தையும் அந்த முடவனின் தட்டில் போட்டு விட்டாள். அவ்வேளை வீமசேனன் தோளில் தண்டாயுதம்போல், ஓர்தடியைத் தோளில் தாங்கிய ஒருவன் முற்பட்டான். அவனைச் சுற்றிக் குஞ்சுகளும், குழந்தைகளும் மொய்த்துக் கொண்டு இருந்தனர். தடிநுனியில் ஒரு சிவப்புநிற வஸ்து பாணியாகச் சுற்றப்பட்டிருந்தது.

"பம்பாய் மிட்டாஸ், அழுகிறபிள்ளையை அமத்துகிற மிட்டாஸ்; ஓடிவா, விழுந்துவா" என்று அவன்சத்தமிட்டுக்கொண்டு அப்பாணியை றப்பர்போல் இழுத்துக் கொண்டு இருந்தான். தடியிலும், பாணியிலும் ஒரே இலையான் கும்பம். கடித்த நேரத்தில் தலையைச் சொறிவான். பின் மிட்டாசை இழுப்பான். பின் ஒரோர் தடவை மூக்கைச் சீறித் தடியிற்பூசுவான். பின் மிட்டாசை இழுப்பான். "ஏய் மிட்டாஸ், இப்படிக் கொடு 25 சதத்திற்" கென்று கையை நீட்டினுன் மாதவன். மிட்டாஸ்காரன் இன்னேர்முறை வீரிட்டு விட்டு ஓர்நீளநாடாக் கணக்கில் இழுத்துக் கொடுத்தான்.

இந்தாடீ! ரோகிணி, அந்த முடக் கழுதைக்குத் தாரைவார்த்த 20 சதமும் இருந்தால்......?" என்று சொல்லிக்கொண்டே ஒரு துண்டை ரோகிணிக்கு நீட்டினுன் மாதவன். "எனக்கு வேண்டாம். நீ தான் சாப்பிட்டு விட்டு வருத்தத்தையும் உத்தரி" என்று விட்டாள் ரோகிணி. அடுத்தநாள் மாதவன் வயிற்றுவலி உபத்திரவம் பொறுக்க முடியாமல் கதறிக்கொண்டு இருக்கும்போது "அந்த மிட்டாசுக்குக் கொடுத்த பணத்தை அந்த ஏழை முடத்துக்குக் கொடுத்திருந்தால்..." என்று கேட்டாள் ரோகிணி.

* * *

* பாலர்பக்கத்திற்கு எழுதுங் கடிதங்களைப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்:

"பாலர் பக்கம்"
மேற்றிராணியார் இல்லம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாட்களைக் குறித்த வினு விடைகள்

**1. சகல அர்ச்சியசிஷ்டர்கள் திருநாள் ஏற்படுத்தப்பட்டதேன்?**

அறியப்பட்டவர்களும், அறியப்படாதவர்களுமான சுத்தவாளர்கள், சுத்தவாளிகளை அநேகாநேகர் வணங்கிச் சங்கித்து மன்றுடுவதற்காகத்தான் மூன்றாம்கிறகோரியார் எனும்பாப்பானவர் (731—741) கார்த்திகைமாதம் 1-ந் திகதியைச் சகலஅர்ச்சியசிஷ்டர்களின் திருநாளாகக் குறித்தருளினர். நான்காம்கிறகோரியார் சர்வ திருச்சபையும் அதனைக் கொண்டாடும்படி நிருபித்தருளினர். மோட்சவாசிகளுள்ளே நமது சுற்றமித்திரும் உண்டென்பதை நினைந்து அவர்களுக்குச் சருவேசுரன் கிருபாதயாளமாய் அருளிய நித்தியமகிமைப் பாக்கியத்துக்காக அவரைத் தோத்திரிப்போமாக. அவர்களுடன் நாமும் ஒன்றுசேரத்தக்கதாய் அவர்கள் எங்களுக்காகப் பரிந்து பேசும்படி அவர்களைப் பிரார்த்திப்போமாக.

**2. சகல உத்தரிக்கிற ஆத்துமாக்களுடைய திருநாள் எப்போது ஆரம்பமாயிற்று?**

கார்த்திகைமாதம் 2-ந் திகதியன்று கொண்டாடப்படும் இத் திருநாளை மடாதிபரான ஒடிலோ 998-ம் ஆண்டு தமது துறவறமடங்கள் எல்லாம் கொண்டாடிவருமாறு ஒழுங்கு செய்தருளினர். காலவட்டத்திலே மறு துறவறமடங்களும், பலமேற்றிராசனங்களும், ஈற்றிலே முழுத் திருச்சபையுமே இப்பத்திக்கொண்டாட்டத்தைக் கைக்கொண்டு அநுசரிக்க நேரலாயிற்று. இத்தினத்திலே குருப்பிரசாதிகள் மரித்தவிசுவாசிகளின் மந்திரமாலை செபித்துவருகிறார்கள். 15-ம் ஆசீர்வாதப்பர் இந்தத் திருநாளிலே மூன்று திவ்வியபூசைசெய்து ஒப்புக்கொடுக்கும் சுதந்திரத்தைக் குருப்பிரசாதிகளுக்கு அருளலாயினர். மூன்று திவ்வியபூசைகளுள் ஒன்று, உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காகவும், ஒன்று, பூசகரின் கருத்துக்காகவும், ஒன்று, பரிசுத்தபாப்பரசரின் கருத்துக்காகவும் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருநாள் ஞாயிறுவாரத்தில் வரின் அடுத்ததிங்கட்கிழமையே கொண்டாடப்படும்.

**3. உத்தரிப்புஸ்தலம் ஓர் அக்கினிச் சிறைச்சாலை. அதிலே கிடந்து பதைபதைக்கிறவர்களுக்கு நாம் எப்படி ஒத்தாசை செய்யலாம்? ஆறுதல், வேதனைத் தணிவ, மீட்பு எப்படி வருவிக்கலாம்?**

உத்தரிப்புஸ்தலவேதனை மகாகடினமானது மாத்திரமல்ல, மகாநீடியதாயும் இருக்கின்றது. ஆத்துமாக்கள் பலர் மாசக்கணக்காய், வருடக்கணக்காய் மாத்திரமோ, நூற்றாண்டுக்கணக்காயும் உத்தரிக்கத் தீர்வையிடப்படுகின்றார்கள். அவர்கள் தாங்களாய்த் தங்களுக்கு எவ்விதஒத்தாசையும் புரியும் சக்தியுடையவர்கள் அல்ல. ஆகையினாலே அவர்கள்மேல் மகா இரக்கங்கூர்ந்து நம்மாலியன்ற உபாயங்களால் அவர்கள் வேதனையைத் தணிக்க, குறைக்க, முற்றாகத் தீர்த்து ஒழிக்க வேண்டியஉபாயமெல்லாம் நாம பத்தி நிலைமையாய்க் கையாடிவர வேண்டும். விசேஷமாய் உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களின் மாதமாகிய கார்த்திகைத் திருநாட்டினத்திலே இதைக் கவனித்து அநுட்டிக்கவேண்டும். இந்த உபாயங்களுள்ளே முதற்தரமானது, மகா சித்திகரமானது:—

(1) திவ்வியபூசை. இதனைச் செய்விக்க அவகாசமில்லாவிடில் அதனைக் கண்டு ஒப்புக்கொடுக்கலாம்.

(2) திவ்வியநன்மைபெற்று ஒப்புக்கொடுக்கலாம்.

(3) செய்யும் நற்கிரிகைகள், படும் துன்ப துயரங்களை யேசுநாதசுவாமியின் திருஉதிரப்பேறுகளுடன்சேர்த்து ஒப்புக்கொடுக்கலாம்.

(4) பலன் அமைக்கப்பட்ட பத்தி முயற்சிகளைச் செய்து ஒப்புக்கொடுக்கலாம். "யேசுமரிசூசை" போன்ற (7 வருடப் பலன்) மனவல்லயச்செபங்கள், சிலுவைப்பாதை, செபமாலையால் அடையக்கூடிய பலன்கள், குறிக்கப்பட்ட ஆலயச்சந்திப்பு, 6 பா. பிரி. திரி. முதலியவற்றால் அடையக்கூடிய அபூரண, பூரண பலன்களை அலட்சியஞ் செய்யவொண்ணாது.

(5) உபவாசஒறுத்தல், தானதருமம் செபத்துக்கு இறக்கைகள் போலாம். அவைகள் தேவபத்திராசனத்துக்குமுன் பறந்துபோகத் தப்பமாட்டா. ஆத்துமாக்களை ஆறுதற்படுத்த, மீட்கப் பேருதவியாகும்.

இரக்கங்காண்பி; இரக்கம் காண்பிக்கப்படுவாய். எங்கள் உத்தரிப்பு முறையும் வரமாட்டாதா? இரக்கமுள்ளவர்கள் பாக்கியவாளர்; அவர்களே இரக்கம் அடைவார்கள்.

# திருஇருதய சுரூப ஸ்தாபகம்

பேசாலையிலே கிறீஸ்துஇராசா திருநாள் திரிதின ஆராதனைகளுடன் ஆரம்பமாயிற்று. பேசாலைத் திருஇருதயக்கூட்ட அங்கத்தவரால் புதிதாகத் தருவிக்கப்பெற்ற யேசுவின் திருஇருதயச் சுரூபம் சென்றமாதம் 27-ந் திகதி சனிக்கிழமை சாயந்தரம் கட்டளைக்குரவர் வண. ஏ. லெபோன் சுவாமியவர்களால் ஆசீர்வதித்து ஸ்தாபிக்கப்பட்டபின்னர் மாலை ஆராதனை பாடிச் சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. அவ்வமயம் பரிசுத்த வெற்றிநாயகியின் ஆலயமானது கோவிற்பாவிப்புக்கெனச் சொந்தமாய் எடுக்கப்பட்ட யந்திரங்கொண்டு மின்சார வெளிச்சம் ஏற்றப்பட்டும், என்றுமில்லாதவிதமாய் அலங்கரிக்கப்பட்டும் மிக்க சோபைபெற்றிலங்கியது. திருநாளன்றுகாலை 7.30 மணிக்கு வண. கட்டளைக்குரவர் பாடற்பூசை நிறைவேற்றினர். சாயந்தரம் 4.30 மணிக்குத் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதத்தின்பின் திரு இருதயச் சுரூபங்கொண்டும் ஆசீர்வாதம் அருளப்பட்டுத் திருநாள் இனிதே நிறைவேறியது.

— நிருபர்

## நீதியரசரின் தேகவியோகம்

இலங்கைச் சுப்பிறீங்கோட்டுப் பிரதம உபநீதியரசராய்இருந்துவந்த டக்றர் ஆர். எவ். டயஸ்அவர்கள் சென்ற வெள்ளிக்கிழமைஇரவு காலஞ்செல்லலாயினர். இவர் தம்மைப்போலவே சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களாய் விளங்கியிருந்த திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ்அவர்களின் புத்திரரும், சேர் ஹரிடயஸ்அவர்களின் பௌத்திரருமாவர். இவர் ஓர்பரிஸ்றர். சட்டசாஸ்திரத்திலே டக்றர்எனும் பண்டிதபட்டம்பெற்றவர். இவருடைய சிரேஷ்ட புதல்வர் கேம்பிறிஜிலே சட்டசாஸ்திர போதகாசிரியராய் இருந்துவருகின்றார்.

## தாய்லாந்தின் அரசர்

தாய்லாந்துஎனப்படும் சீயதேச புமிபொன் அடுலெற்அரசரும், அவர் பாரியாரும், அவர்களின் பெண்குழந்தையான குமாரத்தியும் அடுத்த வாரத்திலே இலங்கைக்கு விஜயஞ் செய்து மூன்று தினங்கள்வரையில் தங்கி இங்குள்ள புத்தக்ஷேத்திரங்கள், மற்றும் ஸ்தாபனங்களைத் தரிசிக்கவிருக்கின்றார்கள். இவர்கள் புத்தரின் தந்தத்தைத்தரிசித்து வணங்கத் தங்களுக்குள்ள விருப்பைத் தெரிவித்துத் தாலதமாளிகையின் அதிகாரிகளுக்கு ஏலவே செய்திஅனுப்பியிருக்கின்றார்கள்.

Mal. No. 519. Eng

## வைத்திய ஆராய்ச்சிக்கான நோபெல் வெகுமதி

உலகில் பெருந்தொகையான தொற்றுநோய்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றாகிய கண்டக்கரப்பான், பிள்ளைகள்மத்தியிலே அதிகமாகப்பரக்கின்றது. ரோகபீசம் ஒன்றால் உண்டாகின்ற இந்தநோய் வாயின்துவாரத்தையும் கண்டத்தையுமே பிரதானமாகப் பற்றிக்கொள்ளுகின்றது. அவற்றிலே வீக்கத்தை உண்டுபண்ணுகின்றது. இந்தவீக்கம் கடுமைப்படுத்தும்அதிகமான வருத்தங்களிலே மூச்சடைக்கச்செய்து உயிரைவாங்குகின்றது.

அவ்வாறாக, 1894-ம்ஆண்டு ஜேர்மன் ஆராய்ச்சியாளரான போறிங் என்பவர் இந்தநோய்க்கு ஓர் மருந்தைக் கண்டுபிடித்தார். இது மகாவிசேஷப்பட்டதாய் இருந்தது. கண்டக்கரப்பான் நோய்கண்டு வருந்துகின்ற மிருகங்களின் இரத்தங்களிலே "அன்ரி—பொடி" எனப்படும் வஸ்துஇருக்கக் கண்டுபிடித்தார். இதனைக் கண்டக்கரப்பான் நோயாளி ஒருவருக்கு ஊசிமூலம் சரீரத்தில் செலுத்தினார். இது கடூரமான சிக்கல்களின் ஆபத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது.

தமது ஆராய்ச்சிவேலைக்காக 1901-ம் ஆண்டு போறிங் அவர்கள் நோபெல் வெகுமதி பெற்றுக்கொண்டார். இந்த ஆராய்ச்சிவேலை வைத்தியருக்கு அதிகம் முக்கியமானதாயிற்று. அவ்வாறாயின் நோயைஎதிர்த்துப் போராடுவதற்கு, அன்றேல் தடுப்பதற்கான சாதனங்களைக் கண்டுபிடிக்கிற மக்களுக்கு அவ்வாறு செய்வதுதகுதியே. ஏனெனில் இவர்கள் மகத்தான தொண்டு ஆற்றுகின்றார்கள்.

இந்தவேளை தன்னைஅறியாமலே ஒருவரின் மனமானது, பலநூற்றாண்டுகளின்முன் அமெரிக்காவில் சஞ்சரித்திருந்து, ஒருதுண்டு சிங்கோனா மரப்பட்டையை மென்று காய்ச்சலைக்குணமாக்கிய புராதன இந்தியர்களான பூர்வீகசாதியாரின் பக்கமாகத் திரும்புகின்றது. ஏனெனில், இந்தச்சிங்கோனா மரப்பட்டையின் வைத்திய சம்பந்தமான குணங்களைக்கண்டறிந்த செந்நிற இந்தியர்ஒருவர் ஓர்காலம் இருந்திருக்கவேண்டும். எவ்வாறாயினும் அவருடைய நாமத்தை எவருமே ஒருபோதும் அறியமாட்டார்கள்.

......என்றாலும், அவருடைய இரகசியமானது அமெரிக்காவில் மாத்திரமல்ல, ஐரோப்பாவிலுமே பிரசித்தமாகிவிட்டது. இந்நாளிலே சிங்கோனாமரப்பட்டையிலிருந்து குயினைன் செய்யப்படுகிறது; மலேரியாவைஎதிர்த்துப் போராடும்போது, குயினைன் மகாவிசேஷப்பட்ட ஓர் மருந்தாகிறது. அயனுந்தநாடுகளிலும், உபஅயனுந்த நாடுகளிலும் மனிதனுடையவாழ்க்கையிலே இந்தமலேரியா தீமையைவிளைக்கும் அத்தகைய ஓர் செல்வாக்கைக் கொண்டிருக்கிறது.

இந்நாடுகளிலே மலேரியாச்சுரங்கள் அஞ்சத்தக்கபெரும் உபத்திரவமாய் இருக்கின்றன. ஆகையால் முந்தியசர்வதேச சங்கத்தின் அதிகம் நிபுணத்துவம்வாய்ந்த மலேரியாக் கமிஷன் 1938-ம்ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலே மலேரியா வராமல் தடுக்கும் ஓர் பாதுகாப்பாக அது தொற்றிப்பரவும் காலத்திலே தினமும் 400 மில்லி கிறாம் குயினைன் பாவித்துவரவேண்டுமென்று குறித்திருப்பது எவ்வளவோ விசேஷப்பட்டதாகும். இன்னும் ஓர் மருந்தாகவும் குயினைன் மிக விசேஷப்பட்டதாகும்; ஓர்கால் மலேரியா காணுமிடத்து, அதற்கோர் மருந்தாக 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 1முதல் 1·3 கிறாம் குயினைன் பாவிக்க வேண்டுமென்று அதேஅறிக்கையில்தானே சிபாரிசுசெய்யப்பட்டிருக்கிறது

## கிராம முன்னேற்ற சங்கம்

அடம்பன் விசாரணைப்பங்கைச் சேர்ந்த பாப்பாமோட்டை, அர்ச்.சிந்தாத்திரைமாதா கோயிலிலே சென்ற 20-ந்திகதி வழமைபோல் இவ்வூர்ச் செபமாலைமாதாகூட்டப் பெண்மணிகளாலே செபமாலைமாதாதிருநாள் பயபக்தியாகக் கொண்டாடப்பட்டது. முதல்நாள்இரவு காரணிக்க விளக்கங்களுடன் செபமாலைஓதியபின் திருச்சுரூப எழுந்தேற்றம் நடைபெற்றது. திருநாளன்றுகாலை நிறைவேறிய பாட்டுப்பூசையின்போது செபமாலையின் மகத்துவத்தைப்பற்றிய சிறந்தபிரசங்கம்ஒன்று செய்யப்பெற்றது. பின்னர் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறியது. பிந்தப் 12-30மணிக்கு இவ்வூர்க் கிராமமுன்னேற்றசங்கப் பொதுக்கூட்டம் பாடசாலைமண்டபத்தில் வண. வேந்தர்கோன் சுவாமிகள் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. அவ்வேளை தலைவர் அவர்கள் இச்சங்கநிலையத்தில் நவமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள வானொலிவிஷயமாய்த் தலைமைஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளைஅவர்கள் எடுத்துக்கொண்ட அருமுயற்சியையும், இன்னும் அவர் இங்கே ஒருஇலவச பால்நிலையத்தை அதிகபிரயாசையுடன் நிறுவியிருப்பதையும் பாராட்டினர். சிலவிசேஷப்பட்ட பிரேரணைகள் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டபின் கூட்டம்முடிவுற்றது. வானொலிஸ்தாபக விஷயமாகவும், சங்கவளர்ச்சிக்காகவும், வண. சுவாமியவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

— நிருபர்

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

யேசுவின் திருஇரக்கத்தினாலும் பரிசுத்த பாத்திமா இராக்கினியின் கிருபையாலும் அர்ச். அந்தோனியார், தோமையார், சூசையப்பர், ஆரோக்கியநாதர் சகலஅர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும் நான் நினைத்தகாரியம் அனுகூலம் அடைந்ததினால் என் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

எஸ். தோமாஸ்

கொம்பிளிவளை, மாத்தளை

## Ceylon Government Railway

LEVEL CROSSING REPAIRS

The following Level Crossings will be closed to vehicular traffic during the periods stated for effecting repairs :-

(1) **Level Crossing at 157 miles 42 chains Jaffna Line North end of Vavuniya Station:-**

Totally closed from 7.00 a.m. on Tuesday 13-11-51 to 4.00 p.m. on Wednesday 14-11-51.

Road Traffic could be diverted through Mannar Road.

(2) **Level Crossing at 26 miles 48 chains 40 links (Railway Mileage) on the Colombo-Galle Road between Kalutara North and Kalutara South Stations—Coast Line.**

Partially closed from 6.00 p.m. to 10.00 p.m. on Sunday, 25-11-51.

Totally closed from 10.00 p.m. on Sunday, 25-11-51 to 4.00 a.m. on Monday 26-11-51.

During the period of total closure Road Traffic could be diverted through Sirisumangala Road North and Beach Road respectively.

(3) **Level Crossing at 1 mile 40 chains—Main Line between** Maradana and Urugodawatte Railway Stations :-

Partially closed from 6.00 p.m. to 10.00 p.m. on Wednesday, 14-11-51 and from 4.00 a.m. to 6.00 a.m. on Thursday, 15-11-51.

Traffic will be assisted over the crossing.

Totally closed from 10.00 p.m. on Wednesday 14-11-51 to 4-00 a.m. on Thursday 15-11-51.

During the period of total closure traffic may proceed *via* Ingram Road and Kolonnawa Road.

E. C. WIJEYESEKERA,
for General Manager, C.G.R

P. O. Box No. 355,
Colombo; 4-11-51.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 1 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org